பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை 06.10.2023 கதிர் 329

### முல்லை நீதிபதிக்கான அச்சுறுத்தலை எதிர்த்து

# கொழும்பு, புதுக்கடையில் சட்டத்தரணிகள் போராட்டம்

### உண்மையைக் கண்டறிய வலியுறுத்து

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் விடயத்தில் உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி நிலை நாட்டப்பட வேண்டுமென வலியுறுத்தி புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் கவனவீர்ப்பு பேரணி நடத்தினர்.

புதுக்கடை உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்றுக் காலையில் ஒன்று கூடிய சட்டத்தரணிகள், முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு விடயத்திற்கு நீதிவழங்கவேண்டும், உண்மைகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும், நீதித்துறையை அடக்குமுறைக்குள் உள்ளாக்காதே உள்ளிட்ட கோசங்களை எழுப்பியவாறு பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

தொடர்ந்து அங்கிருந்து ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

இலங்கையின் பழம்பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் 2018, 2019, 2020 என்று அடுத்தடுத்து மூன்று ஆண்டுகளில் நடந்த தேர்தல்களுடன் செல்லாக்காசாகிவிட்டன. செயல் திறனும் கவர்ச்சியுமற்ற தலைமைகள், நவீன சமூகத்தின் தேவைக்கு ஏற்ப கட்சியை வழிநடத்த முடியாத நிலையில் பதவியாசையோடு தலைமைக் கதிரையை விடாப்பிடியாகப் பற்றியிருந்ததன் விளைவாக இரு கட்சிகளுமே அரசியலில் காணாமல் போய்விட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியால் 2020 பொதுத் தேர்தலில் ஒரேயொரு ஆசனத்தைக்கூட வெல்ல முடியாமல் போய்விட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத்தைத் ☞ 2

## மன்னாரில் இந்தமுறை பயறு 950 மெட்ரிக் தொன் விளைச்சல்

கிராமிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பின் கீழ் மன்னார் மாவட்டத்தில் சுமார் 950 மெட்ரிக் தொன் பயறு விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இதன் ஊடாக பயறு இறக்குமதிக்கு நாம் செலவிடும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடிந்துள்ளது. இவ்வேலைத்திட்டத்தை நாட்டில் பரவலாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்று கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ☞ 2

## பெண்களைக் கேவலப்படுத்தும் எம்பிக்களுக்கு இராஜாங்க அமைச்சர் டயனா கமகே எச்சரிக்கை

பெண்களைகேவலப்படுத்தினால் கன்னத்தில் அறைவேன் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இராஜாங்கஅமைச்சர்டயனா கமகே எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தததாவது:

நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல நாட்டில் எங்கேயும் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை. பெண்களை யார் என்று நினைத்தீர்கள்.

பெண்களைபெட்டை நாய் என்று இந்த சபைக்குள் கூற முடியாது. பெண்களிடம் கன்னத்தில் அறை வாங்கும் நாளில் புரியும்.

அதனால் பெண்களை அவதித்து பேசுவது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னர் பல தடவைகள் இவ்வாறான மோசமான வார்த்தைபிரயோகங்கள் இந்த சபையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதனால் தொடர்ந்தும் இதற்கு இடமளிக்க முடியாது. அதனால் பெண்களை மோசமாக பேசுபவர்களுக்கு என்னிடம்தான் கன்னத்தில்அறைவாங்க நேரிடும் என்றார்.

### பண்ணையாளர் பிரச்சினையை தீர்க்காமல்

## ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வந்தால் தகுந்த வரவேற்புக் கிட்டும் அவருக்கு

### சாணக்கியன் எச்சரிக்கை

பண்ணையாளர்களின் பிரச்சினையை தீர்க்காமல் ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வருவாராக இருந்தால், அங்கே அவருக்கு தகுந்த வரவேற்பு கிடைக்குமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற துறைமுக அதிகார சபை மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ☞ 2

## மல்லாவி மத்திய கல்லூரி வளாகத்தில் ஒக். 10, 11இல் விவசாயக் கண்காட்சி

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் ஒக்டோபர் 10, 11ஆம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரியில் விவசாயக் கன்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியினை வடமாகாணத்தின் விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து நடாத்தவுள்ளன.

இது தொடர்பாக நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் வடமாகாண பிரதம செயலாளர், ☞ 8

### வெலிகந்த பொலிஸ் நிலையத்தில்

## சர்ஜன்ட் ஹனீபாவின் இறப்பு கவனம் செலுத்தக் கோரிக்கை

பொலொன்னறுவை, வெலிக்கந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஏறாவூரைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் முஹம்மது மக்பூல்ஹனீபா, பொலிஸ் விடுதியில் இரத்தம் தோய்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் எமது கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எம். எஸ்.சுபைர் அவர்கள் என்னிடம் முன்வைத்த வேண்டுகோள் தொடர்பில், தங்களது கவனத்தை செலுத்துமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ☞ 8

### சவால்களுக்கு மத்தியில்

## நாட்டை விட்டுச் செல்வதா இல்லையா? அறிவார்ந்த சமூகம் சிந்திப்பது அவசியம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டைப் பொருளாதார சவால்களில் இருந்து மீட்டெடுத்து போட்டித் தன்மைமிக்க பொருளாதாரத்தை நோக்கிநகர்த்துவதற்காக மனித வளத்தை ஒன்றுதிரட்ட வேண்டும், சவால்களுக்கு மத்தியில் நாட்டை விட்டுச் செல்வதா? இல்லையா? என்பதை அறிவார்ந்த சமூகம் சிந்திக்க வேண்டியது அவசியமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலேயே ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'முப்படைகளினதும் ஆட்சேர்ப்பு பிரிவு அல்லது சிவில் பிரிவைப் பிரதிநித்துவப்படுத்தும் அதிகாரிகள் என்ற வகையில் பட்டத்தை பெற்றுக்கொண்டு நாட்டிலிருந்து இந்தச் சந்தர்ப்பத்தை கடந்து செல்வதா? அல்லது நாட்டை விட்டு வெளியேறுவதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

நாட்டின்பொருளதார சவால்களை ☞ 2

## காலநிலை மாற்றச் சவால்களுக்கு முன்னாள் செல்வந்த நாடுகளின் மோதல் 2ம் பட்சம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

காலநிலை மாற்றம் மற்றும் உயிர் பல்வகைத்தன்மை குறைவடைதல் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடும்போது உலக அரசியலும் செல்வந்த நாடுகளின்மோதல்களும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுமென ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்புஷங்கிரிலா ஹோட்டலில் நேற்று 2024 பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 01ஆம் திகதிவரைநைரோபியில் நடைபெறவிருக்கும் ஆறாவது ஐ.நா சுற்றாடல் சபையின் அமர்விற்கு இணையாக நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் ☞ 8

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு தலைவர் நேற்று பதவி விலகல்



(ந.லோகதயாளன்.)

காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் நிலந்த விஜயசிங்கா நேற்று பதவியில் இருந்து விலகினார்.

தவிசாளராக கடந்த 4 ஆண்டுகளாக பதவி வகித்தார் நிலந்த விஜயசிங்கா. ☞ 2

# காங்கேசன்துறை பயணிகள் கப்பல் 11ஆம் திகதியே ஆரம்பிக்கும்



(ந. லோகதயாளன்)

இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள்கப்பல்சேவை ஒக்டோபர் 11ஆம் திகதி தொடங்கவுள்ளது. சேவையில் ஈடுபடவுள்ள கப்பல் பரீட்சார்த்தப் பயணமாக நேற்று திருகோணமலையைவந்தடைந்தது. இன்று காங்கேசன்துறை வழியாக அது நாகைத் துறைமுகம் நோக்கிச்செல்லும். ☞ 8

## மலையக மக்களின் வீடுகளை அமைக்கும் பணிகள் தாமதம்

### ஏற்றுக்கொண்டார் பிரதமர் தினேஸ் குணவர்த்தன

மலையக மக்களுக்கான இந்தியநன்கொடையின் கீழான வீடுகளை அமைக்கும் பணி தாமதமடைந்துள்ளமையை ஏற்றுக்கொள்வதாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அம்மக்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பாராட்டியும், அவர்களை கௌரவிக்கும் வகையிலும் 'நாம் - 200' நிகழ்வின் அறிமுக விழாவும், சின்னம் வெளியீடும் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தவிர மற்றைய இடங்களில் தன்னிலிருந்துபிரிந்துசென்ற பொது ஜன பெரமுனவின் தலைமையின் கீழ் அடங்கி ஒடுங்கிப் பல ஆசனங்களை வென்றது.

சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களின் பொது ஜன பெரமுன இந்த மூன்று தேர்தல்களிலும் அமோகவெற்றிபெற்றுஆட்சி அதிகாரத்தைக்கைப்பற்றியது. ஆனால், விரைவிலேயே வீழ்ச்சி கண்டது. மக்களால் விரட்டியடிக்கப்பட்டது. இருந்தாலும்அந்தஇடைவெளியைப் பயன்படுத்திக்கொண்டுகூட சுதந்திரக் கட்சியால் மீண்டும் மேலெழுந்துவர முடியவில்லை. அதற்குக் காரணம் துணிச்சலும் ஆற்றலும் கவர்ச்சியும் மிக்க தலைமைத்துவம் அதற்குக் கிடைக்காமல் போயுள்ளமை. இப்போது தனது வரலாற்று அரசியல் எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் - அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் - சேர்ந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றது.

தான் தொடர்ந்தும் தோல்வியுற்ற தலைவராக விளங்கி வந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை சஜித் பிரேமதாஸவிற்கு விட்டுக்கொடுக்க முன்வராத ரணில் விக்கிரமசிங்கவின் போக்கால்சஜித்தலைமையில் அக்கட்சியின்பெரும்பான்மை உறுப்பினர்கள்வெளியேறிய பின்னர் இன்னமும் அந்தக் கட்சியால் எழுந்து நிற்கக்கூட முடியவில்லை.அதனால்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனது கட்சிக்கு வெளியே ஏதாவது ஒரு புதிய கூட்டணியை உருவாக்கி அதனூடாகப் போட்டியிடும் கடும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்கஈடுபட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நின்றால்ஒருத்தர்கூடதனக்கு வாக்குப் போட மாட்டார்கள் என்பது அவருக்கே தெரியும்.

இப்படி இந்த இரு பழம்பெரும் கட்சிகளும் நமதுகாலத்திலேயேஅழிந்து காணாமல் போவதைப் பார்ப்பதைப் போலவே இலங்கையின் மற்றொரு பழம்பெரும் கட்சியான தமிழ் அரசுக் கட்சிக்கும் அத்தகையதொரு நிலை ஏற்படுமோ என்கிற அச்சம் ஏற்படுகின்றது. அந்தக் கட்சியையும் தோல்வி மற்றும் சரிவிலிருந்து தூக்கி நிறுத்தி வெற்றியை நோக்கி நகர்த்தக்கூடிய வல்லமையுள்ள தலைமை இல்லாத நிலையில், அல்லது புதிய தலைமைக்கு இடம்விட்டுக்கொடுக்கப்படாத நிலையில் அந்தக் கட்சியிலிருந்தும், பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற புதிய கட்சியொன்று உருவாகி வருவதற்கான வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றன.

கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் பல வருடங்களாகக் கூட்டப்படாத நிலையில், தலைமை மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை. அடுத்த மாதம் அடுத்த மாதம் என்று சொல்லிச் சொல்லியே பல வருடங்களாகப் பொதுச்சபை கூட்டப்படாமல் நிர்வாக மாற்றங்கள் இன்றி கட்சி நகர்கின்றது. இது கட்சிக்குள் பலருக்கும் - ஓர் அணியாக - அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. எந்தப் பயனும் இல்லை என்றால் இந்தக் கட்சிக்குள் இருந்து என்ன பயன் என்கிற கேள்வி அவர்கள் மத்தியில் எழத்தொடங்கியிருக்கின்றது.

இன்னும் 4 மாதங்களுக்குள் கட்சியின் பொதுச்சபை கூட்டப்பட்டு புதிய தலைமையிடம், நிர்வாகத்திடம் கட்சி கையளிக்கப்படவில்லை என்றால் இந்தப் பிளவு கட்சிக்குள் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று தெரிகின்றது. அண்மையில் மூடிய அறைக்குள் நடந்த ஒரு கூட்டத்தில் கட்சியின் உயர் மட்டத்தைச்சேர்ந்தவர்கள்இது தொடர்பில்தமதுஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

கட்சிக்குள் தலைமைப் பதவிக்குப் போட்டி இருந்தால் அது ஜனநாயகம். அதைவிடுத்து போட்டியே இல்லாமல் கட்சித் தலைமை தெரிவாக வேண்டும் என்கிற பொருந்தாக் காரணத்தைச் சொல்லிக்கொண்டு தலைமையைத் தொடர்ந்தும் தக்க வைக்க முயற்சி நடக்குமானால், எந்தப் பயனும் அற்ற வகையில் இந்தக் கட்சியில் இருப்பதில் அர்த்தமில்லை என்று அந்தக் கூட்டத்தில் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

வரலாற்றின் அரசியல் தடத்திலிருந்து தமிழ் அரசுக் கட்சி காணாமற்போவது ஒன்றும்இதுமுதற்றடவையாக இருக்கப் போவதில்லை. ஆனால், அந்தச்செயல்தமிழ் இனத்தின் நன்மைக்காக - பலத்துக்காக - செய்யப்பட்டது. இப்போது அது ஒரு செயற்றினற்ற தலைமையால் அழிந்து போவதென்பது ஏற்றுக்கொள்ளப் படமுடியாதது. தலைமைக் கதிரைகளில் இருப்பவர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டிய நேரம் இது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கொழும்பு,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழைத்தோட்டம் பொலிஸ்நிலையச்சுற்றுவட்டத்திற்கு வருகை தந்து அங்கிருந்து மீண்டும் உயர்நீதிமன்றத்திற்கு முன்பாக பேரணியாக திரும்பினர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட சட்டத்தரணி தம்பையாஜெயரட்ணராஜா தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றநீதிபதிநாட்டைவிட்டு வெளியேறி இருக்கின்றார். அவர் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு அச்சுறுத்தல்ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அரசாங்கம் பொறுப்புடன் உண்மைகளை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், நாட்டின் அடக்குமுறைச்சட்டங்களை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த ஆட்சி முன்னெடுத்துள்ளது. பொதுமக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றபோது அதற்கு எதிராக அவர்கள் வீதிக்கு இறங்குவதைதடுப்பதேஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது - என்றார்.

சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவிக்கையில், இந்த ஆட்சி அனைவரையும்அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்கே முயல்கின்றது. அதனை எதிர்த்து தற்போது சட்டத்தரணிகள் வீதிக்கு இறங்கியுள்ளார்கள். சட்டத்தரணிகள் வீதிக்கு இறங்கியதால்தான் மஹிந்த ராஜபக் ஷக்க வீட்டுக்குச் செல்வதற்கு நேரிட்டது. ஆகவே தற்போதைய ஆட்சியின்இறுதிக்காலகட்டம் தான் நடைபெறுகின்றது - என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஜனாதிபதி மட்டக்களப்பு வரவுள்ளார். இந்நிலையில் மட்டக்களப்புமயிலத்தமடுவில் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக 22 நாட்களாக போராடி வருகின்றனர். தங்களுடையமேய்ச்சல்தரை பிரதேசங்களை அபகரித்து, ஏனைய மாவட்டங்களில் இருந்துஅமைச்சர்கள்சிலரின் வழிகாட்டல்களில் புதிதாக விவசாயம்செய்யவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேண்டுமென்றால் அவர்கள் வேறு எங்காவது அதனைச் செய்யலாம். இதற்காக தங்களின் மேய்ச்சல்தரைகளைப்பயன்படுத்த முடியாது. அங்கு வெளி மாவட்டங்களில்இருந்துவந்து விவசாயம்செய்தால்அங்குள்ள பண்ணையாளர்கள் தமது மாடுகளை எங்கு கொண்டு செல்வது?

அத்துடன் பண்ணையாளர்களின் கோரிக்கையை நிவர்த்தி செய்வதாக ஜனாதிபதி வாய்மூலம் வாக்குறுதி வழங்கியுள்ள போதும், மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரையில் போராட்டம் தொடரும். இல்லாவிட்டால் இதன் விளைவுகளை மட்டக்களப்பு வரும்போது ஜனாதிபதி பார்க்கக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதிமட்டக்களப்புக்குவர முதல்இதனைதீர்க்காவிட்டால் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டிய கௌரவத்தை நாங்கள் வழங்குவோம் - என்றார்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பெரும் சிக்கலில் இருந்த நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத நேரத்தில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்தச் சவால் மிக்க பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அத்துடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வேலைத் திட்டங்களினால் தற்போது இந்நாடு படிப்படியாக முன்னேறி வருகின்றது. இதற்காக நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். மேலும்அவர்முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு எமது ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்.

அந்த வகையில் எமது அமைச்சு, கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களைநடைமுறைப்படுத்தி வருகின்றது. குறிப்பாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முக்கியமாக விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு கிராமிய மக்களின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளும்நோக்கில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

கிராமிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அவசியமான விதைகளை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். குறிப்பாக உழுந்து, பயறு ஆகிய தானிய வகைகளை பயிரிடுவதற்கு அவசியமான விதைகளைவழங்குவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புகளை தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இதன் மூலம் இம்முறை மன்னார் மாவட்டத்தில் சுமார் 950 மெட்ரிக் தொன் பயறு விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இதன் ஊடாக பயறு இறக்குமதிக்குநாம்செலவிடும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடிந்துள்ளது. இவ்வேலைத்திட்டத்தை நாட்டில்பரவலாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்புக்கு அவசியமானஉதவிகளையும் நாம் வழங்கியுள்ளோம். முக்கியமாக காப்புறுதி வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில் ஆடுகளை வழங்கி வைப்பதனால் ஆடு வளர்ப்பின்போது ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் முடிந்துள்ளது.

சிறிய அளவில் கிராமிய மட்டத்தில் ஆடுகள் வளர்ப்பவர்களைசுமார் 03 அல்லது 04 ஆண்டுகளில் ஆட்டுப் பண்ணையாளர்களாக மாற்றுவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களைஇதன் மூலம்முன்னெடுக்கமுடியும்.

'ஹத பிம' அதிகார சபையின் ஊடாக பயிர்ச்செய்கைக்கு அவசியமான மரக்கன்றுகளை வழங்கிவைக்கும்வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படுவதோடு, கோழி வளர்ப்புக்காக கோழிக் குஞ்சுகளையும் கிராமி மக்களுக்கு வழங்குகின்றோம்.

இளைஞர் விவசாய கிராமங்களை உருவாக்கும் பணிகளும்எமதுஅமைச்சின் ஊடாக பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவருகின்றன. இதற்காக ஏனைய அமைச்சுகளின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளோம்.

இதன்மூலம் குறித்த கிராமத்தை பொருளாதார ரீதியில் அனைத்து துறைகளிலும் தன்னிறைவு அடைந்த கிராமமாக முன்னேறுவதற்கு அவசியமான வகையில் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகளைத் தவிர்த்து கிராமிய மக்களுக்கு அவசியமான விடயங்களைஅவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான மிகச்சரியான தீர்மானங்களையும் திட்டங்களையும் நடைமுறைத்தேவையான வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம்.

அதேபோன்று பொருளாதார மத்திய நிலையங்களை உருவாக்கவும், ஏற்கனவே நிர்மாணிப் பணிகள் நிறைவடைந்து இதுவரை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படாமல் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களை மிக விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

விவசாய நடடிக்கைகளுக்கு நீரைப் பெற்றுக்கொள்ளும் கிராமிய பிரதேசங்களில் உள்ள குளங்கள், கால்வாய்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகளையும்ஜனாதிபதி வழங்கி வைத்துள்ளதுடன், தற்போது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மிக்க சூழ்நிலையிலும் கூட ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதிகளை மீளப்பெறாமல் விவசாயிகளைப் பாதுகாத்து அவர்களின்வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்கு அவசியமான திட்டங்களை முன்னெடுக்க ஜனாதிபதி வழங்கும் ஆதரவையும் இங்கு நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

இம்முறை 'தேசிய மீலாத் விழா' நிகழ்வு மன்னார் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு இணையாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இந்த வேலைத்திட்டங்களின் பயன்கள் குறித்த ஒரு சமூகத்தினருக்குமாத்திரமன்றி மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து சமூகத்தினருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் செயற்படுத்தப்படவுள்ளமை இதன் சிறப்பம்சமாகும் என்றார்.

## காணிச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் அழுத்தமே அவரது பதவி விலகலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் நியமிக்கப்பட்ட தவிசாளரை அக்கட்சியைச்சேர்ந்தவர்களே அழுத்தம் கொடுத்து பதவி விலக வைத்தனர் என்று கூறப்படுகின்றது.

இதற்கமைய எதிர்வரும் திங்கள் கிழமை புதிய தவிசாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

தற்போதைய தவிசாளர் நிலந்த விஜயசிங்கா ஓர் சட்டத்தரணி.

## நாட்டை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகொள்வதற்குநாட்டுக்கு அறிவார்ந்த மனித வளத்தின் அவசியம் உள்ளது. அதனால் உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஒரு தேசமாக பல்வேறு சவால்களுக்கும் நிலையற்ற தன்மைகளுக்கும் முகம் கொடுத்தோம். அதன் விளைவாக தங்களது இலக்குகளை அடைய பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் எண்ணத்துடன் இருக்கின்றனர்.

எவ்வாறாயினும் இலங்கை, இலகுவானதாக இல்லாவிட்டாலும் நிலையான ஒரு பொருளாதார கொள்கையை தற்போது பின்பற்றுகிறது. அதனால், பணவீக்கத்தை குறைத்தவுடன் வருமான வழிமுறைகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

2024 ஆண்டு, எமது நாட்டின் பொருளார வளர்ச்சியைமீளஆரம்பிப்பதற்கான ஆண்டாகும்என்பதோடு,நாடு பொருளாதார சவால்களை எதிர்கொண்ட அனைத்து தருணங்களிலும் நாட்டின் வளர்ச்சிக்கு பட்டதாரிகள் சமூகம் தங்களது பணியை சிறப்பாக செய்துள்ளனர்.

அடுத்த 10 வருடங்களுக்குள் பல்வேறு பொருளாதார மாற்றங்களை உலகம்சந்திக்கப்போகின்றது என்று கூறப்படுகிறது. கனடா மற்றும் ஐரோப்பா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளைஎதிர்கொண்டு வருகின்றன. எதிர்காலம் தொடர்பில் உங்கள் அவதானம் செலுத்தும் போது மேற்படி சவால்களைக் கருத்தில்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

நீங்கள் உள்நாட்டில் தொழில் செய்து நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் போது, சிறந்த பொருளாதார நிலையை நாட்டிற்குள் உருவாக்க முடியும்.

நீங்கள் அந்த பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு அபிவிருத்தியின் பங்குதாரர்கள் ஆவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டும். தேவையேற்படுமாயின் இந்த பட்டத்துடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் இயலுமையும் உங்களுக்கு உள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டு, போட்டித் தன்மை மிக்க பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த வேண்டும். அதற்காக நாட்டின் மனித வளத்தையும் ஒன்றுதிரட்ட வேண்டும்.

இலங்கையில் 450 இற்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றை பல்கலைக் கழகங்கள் அல்லது கல்வியற் கல்லூரிகளாக மாற்ற வேண்டும். அதனால் தொழில்வான்மை மிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

தொழில் திறன் கொண்ட பிரஜைகளுடன் இலங்கையின் கதவுகளை உலகிற்கு திறக்கும் வாய்ப்பு உள்ளது. அதேபோல் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப தெரிவுடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இராணுவத்தினரும் சிவில் சமூகமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொதுவான கட்டமைப்பாக பல்கலைக் கழகங்களைமாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கிண்ணியா குரங்குபாஞ்சான் மக்கள் காணிக்குள் பௌத்த துறவிகள் இரு நாள்களாக படையெடுப்பு

## மக்கள் சந்தேகம்







திருகோணமலை மாவட்டம்,கிண்ணியா பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள கிண்ணியா குரங்கு பாஞ்சான் என்கின்ற பிரதேசத்தில் இராணுவமுகாம்இருந்த முஸ்லீம்களுக்கு சொந்தமான காணிக்குள் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையில் ஐவர் கொண்ட குழு தொடர்ச்சியாக காரில் வந்து சென்றனர்.

இவர்கள் மீது சந்தேகம் கொண்ட விவசாயிகளும் சமூக நிறுவனங்களும் குடியிருப்பாளர்களும் கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தியின் கவனத்திற்கு இதனை கொண்டு வந்தனர். இதனால் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன்இதுதொடர்பில் குறித்த இடத்துக்கு சென்று உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்குழுவினர் புதையல் அகழ்வதற்காகவா அல்லது ஏதேனும் அடையாளங்களை புதைப்பதற்காகவா ?அல்லது ஏதேனும் மதம் சார்ந்த வணக்கதளங்களை அமைப்பதற்காகவா ?வந்து செல்கின்றார்கள் என்ற சந்தேகம் பரவலாக மக்களை பீதிக்குள்ளாக்கியது.

உடனடியாக களத்திற்கு சென்ற நான் பொலிஸாருக்கும் அறிவித்ததோடு 119 எனும் அவசர பொலிஸ்முறைப்பாடுசேவைக்கும் அறிவித்ததோடுபிரதேசசெயலாளர், கிராம உத்தியோகத்தர்,

சூரங்கல் இராணுவ முகாம் போன்றவற்றிற்கும் தகவல்களை வழங்கி அவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பதை எனக்கு அறிய தாருங்கள் என கேட்டுக் கொண்டேன்.

நாடெங்கிலும் சிறுபான்மை சமூகம் வாழுகின்ற இடங்களில் நடைபெறுகின்ற செயற்பாடுகள் போன்று அல்லது கடந்த கால அனுபவங்கள் போன்று இக்கிண்ணியாவிலும் ஒரு பதற்றமான சூழ்நிலை உருவாகி விடக் கூடாதுஎன்பதற்காகஇந்நடவடிக்கை என்னால் எடுக்கப்பட்டது என மேலும் தெரிவித்தார். (05)

# சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ் திணைக்களங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டதால் நம்பிக்கை இழப்பு

## ரிஷாத் எம்.பி. சுட்டிக்காட்டு



சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதால், சிறுபான்மை சமூகங்களின் நம்பிக்கைகள் சீர்குலைந்துள்ளன என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குடியியல்நடவடிக்கைகள் சட்டக்கோவை திருத்தச் சட்டம் மற்றும் தேர்தல் திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் –

அரசமைப்புக்குஅடுத்தபடியாக பொலிஸ் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தையே பாதுகாப்புக்காக மக்கள் நம்பியுள்ளனர். குறிப்பாக, சிறுபான்மையினருக்கு நம்பிக்கையாக இத்திணைக்களங்களே உள்ளன. ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இத்திணைக்களங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டிருந்தன. என்னுடைய கைதில் இதை நான் உணர்ந்தேன். நட்ட நடுநிசியில் ஒரு பயங்கரவாதியைப்போல் என்னைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். எந்த விசாரணையும் இல்லாமல் சிறையென்றும் சி.ஐ.டி. என்றும் என்னை அலைக்கழித்தனர்.

கைதானவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றவியல் கோவைகள் சகலதும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. விசாரணைகளை தாமதப்படுத்தி, சிறையில் வைக்கும் நோக்குடன்தான் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட்டது. அரசியல் அழுத்தத்தின் நிகழ்ச்சி நிரல் இதற்குப் பின்னால் இருந்தது.

கைதாகி விடுதலையான எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை மீண்டும் கைது செய்யுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பலர் வற்புறுத்தினர். இரு மௌலவிகளைக் கைது செய்து, பொய் சாட்சியம் சொல்லாவிடின் கொலை செய்து விடுவோம் என்றும் சி.ஐ.டியினர் அச்சுறுத்தியுள்ளனர். பாடசாலை நிகழ்வுக்கு பிரபல சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுடன் பயங்கரவாதி சஹ்ரானும் வந்ததாக பொய் சாட்சியம் கூறும்படியே இம்மௌலவிமார் அச்சுறுத்தப்பட்டனர்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் மஹர சிறைச்சாலைக்கு அருகிலிருந்த பள்ளிவாசலை மூடியுள்ளனர். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில், 1903 இல் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட இப்பள்ளிவாசலை மீளவும் திறக்குமாறு கோருகிறேன்.

அல் ஆலிம் பட்டம் பெறுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமிய கிதாபுகள், புத்தகங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதும் நிறுத்தப்பட்டுள்ளது.

வைத்தியர்களான ரிஷ்வி ஷெரீப், ஙபி ஷிஹாப்தீன் ஆகியோரைக் கேவலப்படுத்த உச்சளவில் முயற்சித்தது சி.ஐ.டி. இதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் உடந்தையாக கருமமாற்றியது.

தற்போதைய ஜனாதிபதியான ரணில், பிரதமராக இருந்தபோது அவருக்காக சிறப்புடன் வாதாடியவர்தான் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா. ஒரு வரிக் கவிதை எழுதியதற்காக அஹ்னாப் ஜெஸீம் உள்ளிட்ட முஸ்லிம் கவிஞர்களை சிறையிலடைத்தனர். இவை அனைத்துக்குப் பின்னாலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய செயற்பட்டார். சஹ்ரான் என்ற ஒருவனுக்காக முழு முஸ்லிம்களையும் பழிவாங்கும் மனநிலையில் அன்றைய அரச நிர்வாகம் இருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டை விட்டு ஓடுமளவுக்கு நீதித்துறையில் அழுத்தங்கள் நுழைந்துள்ளன. எமது நாட்டை இன்று பிச்சை எடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றதும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் நிர்வாகம்தான். – என்றும் தெரிவித்துள்ளார். (05)

# ஆசிரியர் தின அன்பளிப்புகளுக்கு சாய்ந்தமருது பாடசாலையில் தடை

வருடா வருடம் ஒக்ரோபர் 6 ஆம் திகதி (இன்று) எமது நாட்டில் ஆசிரியர் தினம் அனுஸ்டிக்கப்படுகின்றன. இத்தினத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு தனியாகவும், குழுக்களாகவும் அன்பளிப்புப் பொருள்களை வழங்கி வருகின்றனர். இதனால் வகுப்பறைகளில் வறிய மாணவர்கள் பல்வேறு விதமான மன உளைச்சலுக்கும் சவால்களுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் முகங்கொடுக்கின்ற அதேவேளை இன்றைய பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும் மத்தியில் பெற்றோர்களாகிய நீங்களும் பல சங்கடங்களுக்கு உட்படுகின்றீர்கள்.

எனவே, கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களுக்கோ அல்லது அதிபருக்கோ எந்தவிதமான அன்பளிப்புப் பொருள்களையும் இரகசியமாகவோ அல்லது பரகசியமாகவோ வழங்குவதற்கு பாடசாலை முகாமைத்துவக் குழு தடைவிதித்துள்ளது என சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் பகிரங்க அறிவிப்பை விடுத்துள்ளார்.

அவரது அறிவித்தலில் மேலும், பெற்றோர்களாகிய நீங்கள் ஆசிரியர் தினத்துக்காக உங்களது பிள்ளைகளிடத்தில் பணமாகவோ அல்லது பொருளாகவும் எதனையும் கொடுத்து அனுப்ப வேண்டாம் என அன்புடன் கேட்டுகிகொள்கின்றேன். அவ்வாறு மீறி அனுப்பிவைக்கும் பெற்றோர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். உங்களது ஆசிரியர் தின அன்பளிப்புக்கள் எமது ஆசிரியர்களின் தேக ஆரோக்கியத்திற்காகவும் நீடித்த ஆயுளுக்காகவும் பிரார்த்தனைகளாக அமையட்டும் என்று தெரிவித்துள்ளார். (05)

# ஆயுர்வேத மத்திய மருந்தகத்துக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கல்

அம்பாறை - சம்மாந்துறை மல்வத்தை ஆயுர்வேத மத்திய மருந்தகம் அமைந்துள்ள வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், குறித்த வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர், வைத்திய கலாநிதி திருமதி இ.ஶ்ரீதரிடம் வழங்கி வைத்தார். (05)

# ஆயுர்வேத வைத்தியசாலை தொடர்பாக வைத்தியர்களுடனான மீளாய்வு கூட்டம்





கல்முனை பிராந்திய சுகாதார ஆயுர்வேத வைத்தியசாலை தொடர்பாக, ஆயுர்வேத வைத்தியர்களுடனான மீளாய்வுக்கூட்டம் கடந்த புதன்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலின் ஏற்பாட்டில் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த மீளாய்வுக்கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த மீளாய்வுக்கூட்டத்துக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் திருமதி இ.ஶ்ரீதர் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த மீளாய்வுக்கூட்டம் இடம்பெற்றது.

ஆயுர்வேத வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் நேரடியாக கேட்டறிந்து கொண்டதுடன் ஆயுர்வேத வைத்தியத்துறையை மக்கள்மயமாக்கி அதனூடாக ஆயுர்வேத உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் மக்களுக்கு ஆயுர்வேதத்துறை மீதான நம்பிக்கையைமேலும்கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் பாரம்பரிய மருத்துவம் பற்றிய ஆய்வுகளை செய்வதற்கு முன்வரவேண்டும் என குறித்த மீளாய்வு கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

இந்தநிகழ்வில், கல்முனை பிராந்தியத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏழைகளுக்கே மேலும் துன்பம்

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு நடுத்தர மற்றும் ஏழை மக்கள் காரணமானவர்கள் அல்லர். இன்னும் சொல்லப்போனால் இந்த நெருக்கடியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான். இருந்தாலும் இன்று இந்த ஆட்சி முன்னெடுக்கும் பொருளாதார மீட்சித் திட்டங்களின் சுமையைத் சுமக்கவேண்டியவர்களாகவும் அவர்களே இருக்கின்றார்கள். அந்தச் சுமையை அவர்கள் மீது சுமத்தத்தான் இந்த ஆட்சி திட்டமிடுகின்றது.

பொருளாதார மீட்சிக்கு அவசியமானதாக பன்னாட்டு நாணய நிதியத்தால் தொடக்கத்திலிருந்தே முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று கடன் மறுசீரமைப்பு. ஆனால், உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என்று அது வலியுறுத்தவில்லை. இருப்பினும் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் ஆட்சியாளர்களை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை நோக்கித் தள்ளினார்கள். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பைமுதலில்முடித்தால்தான்வெளிநாட்டுகடன்மறுசீரமைப்புச் சாத்தியம் என்றார்கள்.

இப்போது இந்த உள்நாட்டு கடன்மறுசீரமைப்புத் திட்டத்தால் – லாபகரனமா எரிசக்தி விலை நிர்ணயம், மின்சாரக் கட்டண உயர்வு – மக்கள் நசுக்கப்படுவது ஒரு பக்கம் இருக்க, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் முழுச் சுமையையும் இந்த நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் மீது தூக்கி வைத்துள்ளது இந்த ஆட்சி.

இலங்கை அரசு பெருமளவு கடனை இந்த நாட்டின் வங்கிகளிடம் இருந்து பெற்றுள்ளது. எனவே அதனை மறுசீரமைப்பது என்று ஆட்சியாளர்கள்சிந்தித்தபோது, ஏற்கனவே50சதவீதத்திற்கும்அதிகமான வரிகள் மூலம் வங்கிகள் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெருமளவு பங்களிக்கின்றன என்றும், வங்கிக் கடன்களை மறுசீரமைத்தால் அது வங்களில் உள்ள 57 மில்லியன் பொது மற்றும் தனியார் வங்கி வைப்புக்களைப் பாதிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தொழிலாளர்களின் ஊழியர் சேம லாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் மீது ஆட்சியாளர்கள் கை வைத்தனர்.

தமது உழைப்பில் இருந்து ஓய்வு காலத்திற்கான நிதியாக 20 சதவீதத்தை சேமித்த தனியார் துறை ஊழியர்களே இப்போது மொத்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் அனைத்துச் சுமைகளையும் சுமக்க வேணடிய கட்டாயம்ஏற்பட்டிருக்கின்றது. ஆட்சியாளர்களின்திட்டத்தினால் ஊழியர் வருங்கால வைப்பு நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகியவற்றை உள்ளடக்கிய ஓய்வுக்கால நிதிகளுக்கான வட்டி விகிதம் 2025 முதல் 9 சதவீதமாகக் குறைக்கப்படுகின்றது.

அப்படியிருந்தும் பன்னாட்டு நாணய நிதியம் ஆட்சியாளர்களின் செயற்பாடுகளில் திருப்தியடையவில்லை. கடந்த மாதம் இலங்கைக்கு வந்திருந்த நிதியத்தின் அதிகாரிகள் குழு அடுத்த கட்ட கடனுக்கான பேச்சுக்கள் இன்னும் முடிவடையவில்லை என்று தெரிவித்துவிட்டு வெளியேறிவிட்டனர். வருமானத்தைப் பெருக்கும் வழிகளில் இலங்கையின் அடைவுகள் மோசமாக இருப்பது இதற்கான காரணம் என்று கூறப்படுகின்றது. அதாவது அரசு வருமானத்தைப் போதியளவில் ஈட்டவில்லை என்றால் இனிக் கடன் கிடைப்பது கடினமாகிவிடும்.

இது மக்கள் மீது சுமத்தப்படும் மற்றொரு சுற்று நிதிச்சுமைக்கான எதிர்வுகூறலாக இருக்கின்றது. துபன்னாட்டுநாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் இரண்டாவது தவணையை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக அறிவித்த ஒரு நாளுக்குப் பிறகு, லங்கா மின்சார நிறுவனம் (LECO) தனது வாடிக்கையாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வரியை அறிவித்தது, அதே நேரத்தில் இலங்கை மின்சார சபை (CEB) தனது கட்டணங்களை உயர்த் ஏற்கனவே அனுமதி கோரியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் சாதாரண வீட்டு உபயோகப் பாவனையாளர்களுக்கான மின்சாரக் கட்டணம் உண்மையில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அது இன்னும் அதிகரிக்கப்படுவது ஒவ்வொரு குடும்பத்திற்ககுமே கொடுந்துன்பமாக இருக்கப்போகின்றது. தனது வருமானத்தை அதிகரிப்பதற்கு இப்படி கட்டணங்களை அதிகரிப்பதையும் வரிகளை அதிகரிப்பதையும் தவிர ஆட்சியாளர்களுக்கு வேறு வழிகள் இல்லை.

அதேநேரம், தொழில்வல்லுநர்கள், உயர்அதிகாரிகள்தொழிலதிபர்கள் மற்றும் அரசியல்வாதிகள் வரி ஏய்ப்பு செய்வதற்கு இந்த ஆட்சியாளர்கள் இடமளிக்கின்றனர். .ஆனால், ஏழை மக்களைத் துன்பறுத்துகின்றது.

உள்நாட்டு வருவாய் திணைக்களம் (IRD) ஒகஸ்ட் மாதம் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு செய்தியை அனுப்பியிருந்தது. வரி நிர்வாகத்திலேயே லஞ்சம் வாங்கியதை ஒப்புக்கொண்டு, 'ஊழலைக் கொல்லாவிட்டால், அது இலங்கையைக் கொல்லும்' என்று அந்தச் செய்தி எழுதப்பட்டிருந்தது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (IRD) ஆணையாளர் நாயகம் ரஞ்சித் ஹப்புஆராச்சி, வரிக்கான வரம்பு அளவு மூன்று மில்லியன் ரூபாவிலிருந்து 1.2 மில்லியன் அல்லது 100,000 ஆக குறைக்கப்பட்ட போதிலும், வரி வசூலிப்பில் அதிகரிப்பைக் காண முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

நிலுவையில் உள்ள மொத்த வரி வருவாய் ரூ. 950 பில்லியனைத் தாண்டியதாகச் செய்திகள் வெளியாகின. நாடாளுமன்றத்தின் பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அலுத்கமகே, அரச கருவூலத்திற்கு பெருமளவு 1000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதிகாரிகளின் திறமையின்மை மற்றும் ஊழல் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் கலால் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களும் முறையாக அபிவிருத்தி செய்யப்பட்ட அமைப்புகள் இல்லாததன் காரணமாக வருடாந்தம் 500 பில்லியன் இழப்பு ஏற்படுவதாகத் தெரிவித்தார்.

இது பல தசாப்தங்களாக இருந்து வரும் நிலை. அப்படியானால், ஊழல் நிறைந்த பணக்காரர்களுக்காக ஏழைகள் தண்டிக்கப்படுவதும், நிலைமையைக் கையாள்வதில் அரசின் திறமையின்மையும் எந்த வகையில் நியாயம்?




## காலிஸ்தானுக்கும் அப்பால்...

**என். சத்திய மூர்த்தி**

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையேயான காலிஸ்தான் தீவிரவாதிகள் பிரச்சினையை முன்னிறுத்தி, இலங்கை தமிழ் தலைமைகள், நல்ல காலம் இன்னும் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை. கடந்த காலங்களில், இது போன்ற சூழ்நிலையில், அடுத்தது தனி நாடுதான், அதனை இந்தியா நமக்கு பெற்று தரும் என்ற லெவலில் அறிக்கை விட்டவர்கள் இப்போது அமைதி காக்கிறார்கள். வரவேற்கதக்க விடயம்.



இங்கு பிரச்சினை, இந்தியா, காலிஸ்தான் தீவிரவாதத்தை ஆதரிக்கிறது என்றால், அதன் அடிப்படையில், இங்குள்ளோரும் எதனையோ எதிர்பார்க்கலாம். ஆனால், காலிஸ்தான் தீவிரவாதம் விடயத்தில், இந்தியா பாதிப்பிற்கு உள்ளான நாடு. இலங்கை அரசை போலவே, இந்திய அரசும், கனடா தங்கள் நாட்டை சார்ந்த தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவு கொடுப்பது போல செயல்படுகிறது என்று குற்றம்சாட்டி வருகிறது.



இன்னும்சொல்லப்போனால், இந்தியா இத்தகைய குற்றச்சாட்டை கடந்த வாரங்களில் மீண்டும் முன்னெடுத்தபோது, இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, அதற்கு ஆதரவு கொடுத்தார். இவ்வாறுதான், கனடா, இலங்கை தமிழ் அமைப்புகளுக்கும் அநியாயத்திற்கும் இடமளிக்கிறது என்று நினைவூட்டவும் அவர் தவறவில்லை.

அதாவது, இனப்பிரச்சினை விடயத்தில், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்குலக நாடுகள் முன்னெடுக்கும் எந்தவொரு முயற்சியையும் இந்தியா ஆதரித்து விடகூடாது என்பதே அலி சப்ரியின் நோக்கம். இல்லையென்றாலும், ஐ.நா. மனித உரிமை அமைப்பில் இலங்கை குறித்த வாக்கெடுப்புகளில் இந்தியா நடுநிலையே வகித்து வருகிறது.

அதாவது, உள்நாட்டில் தமிழர்களுக்கான உரிமை மறுக்கப்படுகிறது. என்றாலும், சர்வதேச அரங்கில், மேலை நாடுகள், இலங்கை போன்ற ஒரு மூன்றாம் உலக நாட்டினை மட்டுமே தொடர்ந்து குறிவைத்து வருகின்றன. இதுவே இந்தியா நடுநிலை வகிப்பதற்கான காரணம் என்று கூறலாம். இந்த முறையும்ஜெனிவாமனிதஉரிமை அமைப்பில், இலங்கையை இந்தியா போட்டு தாக்கி இருந்தாலும், வாக்களிப்பு என்று வரும்போது தொடர்ந்து நடுநிலையே வகிக்கும் என்று எதிர்பார்க்கலாம். காரணம், கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக தற்போதைய நரேந்திர மோடி அரசின் ஆட்சி காலத்தில், ஐ.நா. மற்றும் அமெரிக்கா போன்ற மேலை நாடுகள், சிறுபான்மையினர் விடயத்தில், தொடர்ந்து இந்தியாவையும் குறிவைக்கின்றன.

மனிதஉரிமைகள்அமைப்பை தவிர, மேலை நாடுகள், தங்களது அரசு இயந்திரம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலமும் இந்தியாவை குறி வைக்க தொடங்கி உள்ளன. அந்த வகையில், தங்களது எதிரியான சீனாவுடன் அண்டை நாடான இந்தியாமீண்டும்ஒருங்கிணைந்துசெயல்படமுடியாதுஎன்ற நிலைமை தோன்றிய பின்னர், தங்களுடனான உறவையும் இந்தியாவுக்கு மூச்சுமுட்டும் அளவிற்கு இறுக்கிப் பார்க்கிறார்கள்.

இந்த விடயத்தை இந்தியா எவ்வாறு கையாளுகிறது, எதிர்காலத்தில் கையாளப்போகிறது என்பதைஉலகநாடுகள்உன்னிப்பாககவனிக்கத்தொடங்கிஉள்ளன. அதனையே இலங்கை அரசும் செய்கிறது. அதை மட்டுமே இலங்கை தமிழர் தலைமைகளும் செய்யவேண்டும். இல்லாமல், மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டு, சில காலத்திற்கு பின்னர் 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற வழமையான பிலாக்கணத்தை பாடும் நிலைமைக்கு தங்களை தள்ளிவிட்டுவிட கூடாது.

### அரசியல் கட்டாயம்

இந்தியா-கனடா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேயான தற்போதைய பிரச்சினைதான் என்ன? அண்மையில் கனடாவில் அந்த நாட்டு குடிமக்களாக தசாப்தங்கள் கடந்து நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் சீக்கிய இனத்தவர்கள் இடையே அரங்கேறிய சண்டைகளில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்பவர் கொலை செய்யப்பட்டார். அவர், இந்தியாவில் இருந்து தனி நாடு கேட்கும் சீக்கிய சமுகத்தை அடையாளப்படுத்தும் காலிஸ்தான் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்.

இது நடந்து சில வாரங்களுக்கு பின்னர், இந்திய தலைநகர் புது டெல்லியில் அரங்கேறிய ஜீ-20 உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட தனக்கு மட்டும் இந்தியா உரிய மரியாதை தரவில்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தரப்பு முறுகியது. இது விடயத்தில், கனடா நாட்டு பத்திரிகைகளும் ட்ரூடோ தலைமையை போட்டு தாக்கியது. இதற்கிடையில். தனது தனிவிமானம்பழுதடைந்துடெல்லியில் இரண்டு நாட்கள் அதிகமாக தங்கவேண்டிய நிர்பந்தத்தையும் ட்ரூடோ ரசிக்கவில்லை. அப்போதும் மோடி அரசு தன்னைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று ட்ரூடோ தரப்பு கருதியதாகவும் பத்திரிகைச் செய்திகள் கனடா மக்களைச் சென்றடந்தன.

இந்தியாவிற்கு பதிலடி கொடுப்பதாக நினைத்து, முன்னர் நடந்தேறிவிட்ட காலிஸ்தான் தீவிரவாதி நிஜ்ஜாரின் கொலை வழக்கில், இந்தியாவின் அயல்நாட்டு உளவு நிறுவனமான 'ரா' அமைப்பை இணைத்து, ட்ரூடோ தனது நாட்டு நாடாளுமன்றத்தில் முழங்கினார். உள்நாட்டு அரசியல் நிர்பந்தம் இருந்தது. தனது குற்றச்சாட்டின் அடிப்படையில், இந்தியாவின் தூதரகத்தில் இராஜதந்திரியாக அறியப்பட்ட ரா-குழுவின் தலைவரை நாட்டைவிட்டு வெளியேற ட்ரூடோ ஆணையிட்டார்.

### உரிய பதிலடி

இந்தியாவும் நடைமுறை பழக்கத்தின்படி, புது டெல்லி தூதராலயத்தில் செயல்பட்டுவரும் கனடா நாட்டு உளவு அமைப்பின் தலைவரை வெளியேற உத்தரவிட்டது. இரு நாடுகளுக்கும் இடையே தடித்த குற்றச்சாட்டுகளுக்குப் பின்னர். இந்தியா மேலும் 40 கனடிய தூதராலய அதிகாரிகளை வெளியேற உத்தரவிட்டுள்ளது.

கனடாவோ இப்போது கீழிறங்கி வந்து இரு நாட்டு பிரச்சினைகளை பொதுவெளியில் அல்லாமல் தனியாகவே பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று கூறி உள்ளது. அதேசமயம், இந்தியாவின் தற்போதைய முடிவிற்கு பதிலடி கொடுக்காமலும் இருக்கமுடியாது.

காலிஸ்தான் தீவிரவாதம் சாா்ந்த இந்தியா-கனடாபிரச்சினை இன்று, நேற்று தோன்றியது அல்ல. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் 1985ஆம் ஆண்டு நடந்தேறிய 'எம்பரர் கனிகா' விமானத்தின் மீதான காலிஸ்தான் தீவிரவாத தாக்குதலில் 329 போ உயிரிழந்தனர்.

(5ஆம் பக்கம் பார்க்க..)

# மக்கள் மீது தொடர்ந்து வரி விதிக்கும் கொள்கைத் திட்டம் அரசிடம் இல்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் கூறுகிறார்



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக ஊழியர் மட்ட பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் மீது தொடர்ந்து வரி விதிக்கும் கொள்கை கிடையாது. ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்வது குறித்து நாணய நிதியத்துடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்சேமசிங்கதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இருபத்தேழு இரண்டின் கீழ் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட முதல் தவணை நிதியம் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது.

இரண்டாம் தவணை நிதியை பெற்றுக்கொள்வதற்கு தற்போது இரு மற்றும் பல்தரப்பு பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தநிலையில்தான் 2022.05.01 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய கடந்த செப்ரெம்பர் மாதம் ஊழியர்மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த முதல் கட்ட 51 நிபந்தனைகளில் 47 நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளோம்.

நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு பல கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நாடாளுமன்றத்தின் ஊடாக பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நாணய நிதியத்துடனான பேச்சுகளை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கு ஒரு தரப்பினர் நீதிமன்றம் சென்றதையும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் தவணை நிதியுதவி வழங்கலை நாணய நிதியம் இடைநிறுத்தியுள்ளதாகக் குறிப்படப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நிறைவடைந்த 9 மாத காலத்தில் அரச வருமானம் 43.5 சதவீதமாக உயர்வடைந்துள்ள போதும் 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட அரச வருமான இலக்கை அடைய முடியவில்லை.

பொருளாதார மீட்சிக்கு பாரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் தற்போது 1.3 ஆகக் குறைவடைந்துள்ளது.

அதே போல் உணவல்லாத பணவீக்கம்-5 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இந்த ஆண்டுக்குள் பணவீக்கத்தை நிலையான தன்மைக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

வெளிநாட்டு கையிறுப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக வாகன இறக்குமதி தற்காலிகமாக தடை செய்யப்பட்டது. எதிர்வரும் வாரமளவில் தனியாள் பாவனை வாகன இறக்குமதியை தவிர்த்து வணிக வாகன இறக்குமதி மீதான தடையைத் தளர்த்த உத்தேசித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக ஊழியர் மட்ட பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் மீது தொடர்ந்து வரிவிதிக்கும்கொள்கைகிடையாது. ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்வது குறித்து நாணய நிதியத்துடன் பேச்சில் ஈடுபடவுள்ளோம்.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையின் பிரதான நிலை கடன் வழங்குநர்களான சீனா, இந்தியா ,ஜப்பான் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். - என்றார். (05)

# காலிஸ்தானுக்கும் அப்பால்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அதில் 269 பேர் கனடிய குடிமக்கள். அதுவே, அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதலுக்கு முன்னர், உலகளவில் படுபயங்கரமான வான்வெளிதீவிரவாததாக்குதலும்கூட. என்றாலும்அன்று முதல்இன்றுவரை, அடுத்தடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட கனடிய அரசுகள் அது குறித்த விசாரணையில் மெத்தனமாகவே இருந்து வந்துள்ளன. அன்றும் சரி, இன்றும் சரி, காலிஸ்தானி தீவிரவாதிகள் குறித்து இந்தியா சரியான விவரங்களை சேகரித்து கொடுத்தும். கனடா கண்டுகொள்ளவில்லை என்பதே உண்மை.

இந்தியா, இலங்கை போன்ற அரசுகளின் கோரிக்கைகள் ஒருபுறம் இருக்க, இது போன்ற பிரச்சினைகளில் கனடா உள்ளிட்ட மேலைநாடுகள் தங்களுக்குள் எவ்வாறு நடந்து கொள்கின்றன? இதுவே அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதல் சதியோடு சம்மந்தப்பட்ட ஒரு தீவிரவாதியாக இருந்தால், கனடிய அரசு இப்படிதான் செயலாற்றுமா?

### புலம்பெயர்ந்தோர் படிப்பினை

இந்தக் கேள்வி ஒருபுறம் இருக்க, இந்தியா-கனடா உறவு சிக்கல்களை குறித்துபுலம்பெயர்ந்த இலங்கைதமிழ் தலைவர்களும்அமைப்புகளும்என்ன பாடம் படித்துள்ளன? பிள்ளையையும் கிள்ளிவிட்டு,தொட்டிலையும்இன்னமும் ஆட்டிவிட்டு, அதனை வேடிக்கை பார்க்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்களா?

சீனா குறித்து இலங்கை அரசின் மீது இந்தியா தொடர்ந்து வருத்தத்தில் இருக்கிறது என்பது உண்மை. முந்தைய ராஜபக் அரசுகள் போலவே தற்போதைய ரணில் தலமையும், இந்தியாவிற்கு தலையையும் சீனாவிற்கு வாலையும் காட்டும் வித்தையையே தொடர்கிறது. அல்லது, விலாங்கு மீன் போல், இந்தியாவிற்கு பிடி கொடுக்காமலே நழுவி விட முடியும் என்றே இலங்கை அரசு கருதுகிறது.

இதன்காரணமாகவே, இந்தியாவை நம்பி, தமிழ்அரசியல்தலைமைகளும் புலம்பெயர்ந்தோரும் அடுத்தடுத்த கட்ட செயல்பாடுகளை தொடக்கி அரசிற்கு அழுத்தம் கொடுக்கலாம். என்ற எண்ணவோட்டம் உரு பெற்றுவருகிறது. அது இன்னமும் பொது வெளியில் பேசு பொருளாகவில்லை.

இலங்கை தமிழர்களை பொறுத்த வரையில், இந்தியா-கனடா பிரச்சினையில் குளிர் காயவேண்டும் என்று நினைத்து தங்களது செயல்பாடுகளை முன்னெடுத்துவிடக்கூடாது. தமிழர் தரப்பிற்கு இந்தியா 'பிரச்சினை சார்ந்த தார்மீக ஆதரவு' மட்டுமே கொடுத்து வருகிறது. கடந்த தசாப்தங்களை போலவே தற்போதும் இந்தியா, அடுத்தடுத்தகட்ட ஆதரவுகளை தமிழர் தரப்பிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

இதற்கு சீன பிரச்சினை காரணம் அல்ல. மாறாக, இலங்கை தமிழர் அரசியல் தலைமைகளுடன், இந்தியாவிற்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களே காரணம். என்ன, கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்த காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசில், அதற்கு முந்தைய தசாப்த உறவுகளும், உரசல்களும் இரு தரப்பு உறவை முன்னே எடுத்து செல்ல கட்டியம் கூறின. இந்திய அமைதி படை மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை காலகட்டமும் இதில் அடங்கும்.

தற்போதைய நரேந்திர மோடி அரசிற்கு அது போன்ற கடந்த கால அனுபவங்களும் இல்லை. அதனால், அவசியங்களும் ஆதங்கங்களும்கூட இல்லை. இதன் காரணமாகவே, இவர்கள் எத்தனை முறை வருந்திக் கேட்டுக்கொண்டும், பிரதமர் மோடி, இவர்களைச்சந்திக்க இன்னமும்நேரம் ஒதுக்கவில்லை. இந்த அடிப்படை உண்மையை அல்லது வித்தியாசத்தை, தமிழ் அரசியல் தலைமைகள் இப்போதுதான் புரிந்துகொள்ளத் தொடங்கி உள்ளன. அதுவும் வரவேற்கத்தக்க விடயமே.



காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணில் சர்வதேச ஊடகத்தில் மஹிந்தவைப் போலக் கருத்துரைத்தார்

## மரிக்கார் விசனம்

சர்வதேச விசாரணையை ஒருபோதும் ஏற்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷவை போல் கருத்துரைத்தமை எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

சர்வதேச விசாரணை இல்லையாயின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா? ஜனநாயகத்தை முடக்கி விட்டு சர்வதேச ஒத்துழைப்பை பெற முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பதவிகளுக்காக ஆளும் தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் புகழ்பாடுகிறார்கள்.

ஜனாதிபதிக்கும் எமக்கும் தனிப்பட்ட ரீதியில் எவ்வித முரண்பாடும் கிடையாது. ஆனால் கொள்கை ரீதியில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்களின் எதிர்ப்பு வலுவடைந்துள்ளது. மக்களின் போராட்டத்தை தடுப்பதற்காகத் தற்போது நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இளைஞர், யுவதிகளுக்கு வை-பை இலவசமாக வழங்குவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது சமூக ஊடகங்களை முடக்குவதற்காக சட்டம் கொண்டு வர முயற்சிப்பது கவலைக்குரியது.

ஜேர்மனிய ஊடகத்துக்கு ஜனாதிபதி வழங்கிய நேர்காணல் தற்போதைய பிரதான பேசு பொருளாகக் காணப்படுகிறது. நேர்காணலில் ஜனாதிபதி குறிப்பிட்ட விடயங்களைக் கொண்டு ஆளும் தரப்பினர் உற்சாகமடைந்துள்ளார்கள். நேர்காணலின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போல் கருத்துரைத்தார்.

ஜனநாயகத்தை முடக்கி, சர்வதேசத்தைப்பகைத்துக்கொண்டு ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. பொதுஜன பெரமுனவினர் கடந்த ஆண்டு லி குவான்யூ, மாத்தீர் மொஹமட் ஆகியோர் என்று குறிப்பிட்டுக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை களமிறக்கி, நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்கள்.

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து ராஜபக்ஷர்கள் தலைமறைவாகி உயிரைப் பாதுகாத்துக் கொண்டார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்கி மீண்டும் பாடம்படித்துக்கொள்ள போகிறார்கள்.



நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை அரசாங்கம் உணர்வுபூர்மாக ஆராய்வதில்லை. எண்ணம் போல் விலையேற்றத்தை இலக்காகக் கொண்டுள்ளது. மீண்டும் மின்கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மீண்டும் மின்கட்டணம் அதிகரித்தால் தென்னாசியாவில் அதிக மின்கட்டணம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தைப் பிடிக்கும்.

தற்போதைய மின்கட்டண அதிகரிப்பால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது எந்தளவுக்கு நியாயமானது. பெறும் வருமானத்தில் மக்களால் எவ்வாறு வாழ முடியும். மக்களின் பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்தாமல் அரசாங்கம் தன்னிச்சையாகசெயற்பட்டால்பாரிய எதிர்விளைவுகளை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். - என்றார். (05)

# பத்தரை மணி நேர தாமதத்தின் பின் தாய்லாந்து புறப்பட்ட எயார்லைன்ஸ்

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு புறப்படவிருந்த இலங்கை விமானம் 10 மணித்தியாலங்கள் 27 நிமிடங்கள் தாமதமாகியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் யு.எல்.-402 கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை 01.10 மணிக்கு தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு புறப்படவிருந்தது.

ஆனால், 10 மணித்தியாலமும் 27 நிமிட தாமதத்துக்கு பின்னர், இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இரவு 11.37 மணிக்கே புறப்பட்டது. மேலும், தாய்லாந்தின் பாங் கொக்கிலிருந்து புதன்கிழமை காலை 10.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் யு.எல்.-403 விமானத்தின் வருகையும் தாமதமாகியதாகத் தெரியவருகிறது. (05)

# 9 மாதங்களில் அரச வைத்தியசாலைகளில் 25 சதவீதத்திற்கும் அதிகமானோர் சேர்ப்பு!

## அமைச்சர் கெஹலிய தகவல்

கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் அரசாங்க வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சுகாதார அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.



மேலும், கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையும் 42 சதவீதமாக அதிகரித்துள்ளதாக கூறிய அவர், தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற நோயாளிகளின் ஆர்வம் குறைந்து வருவதே இந்த உயர்வுக்குக் காரணம் என்றும் சுகாதார அமைச்சர் கூறினார். (05)




காலைக்கதிர் Kalaikkathir

## சர்ஜன்ட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வேண்டியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்படுள்ளதாவது,

கடமை செய்யும் தமது பொலிஸ்நிலையவளாகத்தில் அமைந்துள்ள பொலிஸாரின் விடுதியில் வைத்து இவ்வாறானதொருசம்பவம்இடம்பெற்றுள்ளமையானது, நீதியினை நிலைநாட்டும் பொலிஸாருக்கே இந்த நிலையா? எனக் கேட்கத் தோன்றுகின்றது.

நாட்டின் தற்போதைய நிலையில், காவல்துறையினர்மீதுபொதுமக்கள்கொண்டுள்ள சந்தேகங்களுக்கு மத்தியில், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கும்சிறுபான்மைகாவல்துறை அதிகாரிகளுக்கு இழைக்கப்படும்இவ்வாறானகொடூரங்கள் நிறுத்தப்படல் வேண்டும் என்பதுமட்டுமல்லாது, இப்படிப்பட்ட ஈனச்செயல்களைசெய்பவர்கள்எவராகஇருந்தாலும் தராதரம் பாராது சட்டத்தை உரியமுறையில்நடைமுறைப் படுத்துவது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகிய தங்களது கடமையாகும்.'

அதேவேளை,வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி இந்த மரணம் தொடர் பில் கொடுத்துள்ள அறிக்கையானது, கூறிய ஆயுதத்தால் குத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குறிப்பிட்டுள்ளதால், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் இருக்கும் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் என்றும்அவர்இந்தக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மர்ஹூம் மக்பூல் முஹம்மத் ஹனீபா மிகவும் நேர்மையான ஒரு அதிகாரி என்றும்ஊழல்,மோசடிகளை வன்மையாக எதிர்க்கும் மனப்பக்குவத்தை கொண்ட ஒருவராகவும் காணப்பட்டார் என்றும் பிரதேச மக்கள் சான்றுபகர்ந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், மக்பூல் ஹனீபா பொலிஸ் நிலையத்தின் அவசர அழைப்பு பிரிவான 119க்கு பொறுப்பாக செயற்பட்டு வந்தார் எனவும் இதனை கவனத்தில்கொள்ளுமாறும் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மைச்சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான கொடூரங் கள், இனியும் இடம்பெறாதவாறு சட்ட நடவடிக்கையெடுக்குமாறும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பநிலையினை கவனத்திற்கொண்டு, அவர்களுக்கான நீதியினை உறுதிப்படுத்துமாறும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்களின் கௌரவமானதும் பாதுகாப்பானதுமானவாழ்க்கைக்காக இந்தியா அரசு அளப்பெரும் சேவைகளைவழங்கியுள்ளது. குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடியினுடைய நலத்திட்ட உதவிகள் மிகவும் முக்கியமானவையாகஉள்ளதோடு அவருடைய அரசுக்கு நாம் நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இந்திய நன்கொடையின் கீழான மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டச்செயற்பாடுகள் தமதமடைந்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். அப்பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டிருந்தால் கட்டட நிர்மாணப் பொருட்களின் விலைஅதிகரிப்பு பிரச்சினைகளுக்குமுகங்கொடுத்திருக்கவேண்டியதில்லை.

அதேநேரம், எதிர்வரும் காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை ஆட்சிதொடர்ச்சியாக இந்திய நலன்திட்டச்செயற்படுகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கும் - என்றார்.

## மல்லாவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயம், கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள் கலந்து கொண்டு கண்காட்சி பற்றி விளக்கினர்.

பாடசாலைகளில் வீட்டுத் தோட்டம்என்றகருப்பொருளில் வடக்கு, ஊவாமற்றும்மத்திய மாகாணங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் வீட்டுத்தோட்டங்கள்செய்யப்பட்டன. வடமாகாணத்திலே 150 பாடசாலைகளில் இச்செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதில் 71 பாடசாலைகள் மிகவும் உச்சமானவிளைச்சல்களை பெற்றுள்ளன. அந்த வகையிலே மிகவும் சிறப்பாக செயற்பட்ட 4 ஏக்கர் விவசாய நிலத்தைக்கொண்டமல்லாவி மத்திய கல்லூரியில் இவ்விவசாய கண்காட்சி நடைபெறவுள்ளது.

இவ் விவசாயக்கண்காட்சியிலே மாணவர்கள், விசாயிகள் மற்றும் பொது மக்கள் கலந்துகொள்ள முடியும். இதிலே நம் பாரம்பரிய விவசாய முறைகளுடன் நவீன விவசாய முறைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாக நிபுணர்களால் விளக்கமளிக்கப்படும். உள்நாட்டுமற்றும்வெளிநாடு மரக்கறிகள், இலைவகைகள், சிறுதானியங்கள், சோளம், நெல், காளான் செய்கை, தேனீ வளர்ப்பு, உரம் தயாரிப்பு, ஒருங்கிணைந்த பயிர்ச்செய்கை முறை, பழமரச்செய்கை, ஒட்டுக்கள், பயிர்ச்செய்கை சிகிச்சை நிலையம்,மண்பரிசோதனை முதலியவற்றைபார்வையிட முடியும். அதே நேரம் உடற்திணிவுச்சுட்டி, சத்தான உணவுகள், இசைசிகிச்சை, மூலிகைத்தோட்டம்முதலிய விடயங்களும் இங்கு இடம்பெறவுள்ளன.

நீர்ப்பிரச்சினையை தீர்க்க குறைவான நீர் வளத்தைக் கொண்டு நிறைவான விளைச்சலைப் பெறும் வழிமுறைகளும் காட்டப் படவுள்ளன. இந்நிகழ்வின் மூலம் விவசாயிகளுக்கான சந்தைப்படுத்தலையும் உருவாக்க முடியும்.

இக்கண்காட்சியை பார்வையிடுவதற்காக வேறு மாகாணங்களிலிருந்தும் மாணவர்கள் வருகை தரவுள்ளனர். இக்கண்காட்சிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடமும் துணை நிற்கின்றது. எனவேஇக்கண்காட்சியானது வட மாகாணத்திற்கும் இந்நாட்டிற்கும் மிகவும் பயனுள்ள விடயமாக அமையும். இக்கண்காட்சியை அனைவரும் சென்று பார்வையிடவேண்டும். வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆலோசனையின் இந்தக் கண்காட்சி இடம்பெறுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டது.

## காங்கேசன்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கவுள்ளது. இதற்காக கடந்த மாதம் இலங்கையின் அமைச்சர் நிமால் சிறிபால டி சுல்வா காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகள் முனையத்தைத் திறந்து வைத்தார். இந்தியாஅமைச்சர் எ.வ.வேலு. நாகைத் துறைமுகத்தை ஆழப்படுத்தி தூர்வாரும் பணியினையும் தொடங்கி வைத்தார். இதன்போது அக்டோபர் முதல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நாகப்பட்டினம் துறைமுகத்தை நவீனப்படுத்த இந்திய ஒன்றிய அரசு வழங்கிய 73 கோடி நிதி வழங்கியிருந்தது. துறைமுகத்தை ஆழப்படுத்தி, நவீனப்படுத்தும் பணியை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. இதைத் தொடர்ந்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் குடிவரவு அனுமதிபெறுவது, மருத்துவ பரிசோதனை செய்வது, பயணிகள் கொண்டுவரும் உடமைகளைப்பாதுகாப்பாக வைப்பது மற்றும் ஆய்வு செய்வதுஎனஅனைத்திற்கும் தனித்தனியான இடங்கள் கட்டப்பட்டது. நாகப்பட்டினம் துறைமுகத்தில் பணியாற்றுவதற்காக கடவுச்சீட்டு சோதனை செய்வது, பயணிகளின் உடமைகளை ஆய்வு செய்வது எனப் பல்வேறு பணிகளில் பணியாற்றும் அதிகாரிகள் டெல்லிசென்றுபயிற்சிபெற்று திரும்பியுள்ளனர்.

இவ்வாறு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கியதும்நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து 2 கப்பல்கள் இலங்கைக்கு சென்று வரும். இதில் ஒரு கப்பல், நாகப்பட்டி னத்தில் இருந்து காலை 10 மணிக்குப் புறப்படும். எதிர்திசையில் இலங்கையில்இருந்துமாலை 3 மணிக்கு நாகப்பட்டினம் துறைமுகம் நோக்கி ஒரு கப்பல் புறப்படவுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகம் 60 நோட்டிக்கல் மைல்தூரத்தில்உள்ளதனால் இதற்கானபயணத்திற்குசுமார் 3 மணி நேரம் எடுக்கலாம் எனச்எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேநேரம்புதன்கிழமை காரைக்காலில் இருந்து புறப்பட்ட கப்பல் காலித் துறைமுகம்வழியாகநேற்றுத் திருகோணமலையை அடைந்தது. இன்றே அது காங்கேசன்துறை கடலைத் தாண்டி நாகைத் துறைமுகத்தைச்சென்றடையும். அதனை அடுத்து 9ஆம் திகதி நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளகப்பல்சோதனை ஓட்டத்தினை ஆரம்பிக்கும்.

இவ்வாறு ஆரம்பிக்கும் கப்பல் சேவையானது எதிர் வரும் பருவ மழை காலம் வரையில் மட்டும் இடம் பெறும். அதன்பின்னர் இடை நிறுத்தப்பட்டு, அனைத்து கட்டுமான பணி களும் நிறைவடைந்தும் ஜனவரி மாதம் முதல் முழுமையாக பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் 5ஆவது அமர்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'மனிதகுலம்தற்காலத்தில் தனது இருப்பு தொடர்பிலான பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. காலநிலை மாற்றம் மற்றும் உயிர் பல்வகைத்தன்மை குறைவடைதல் போன்ற சுற்றுச்சூழல்பிரச்சினைகள்என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புபடுகின்றமையினால் மனிதர்களுக்கும், சமூகங்களுக்கும், பூமிக்கும் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன. அத்தோடு இந்த மூன்று புவிசார் பிரச்சினைகளும் பூமியின் எல்லைகளையும் கடந்துச் சென்றுள்ளது.

உலகில் அறியப்பட்டிருக்கும் 8 சதவீதமான உயிரினங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளன. மேலும் 22 சதவீதமான உயிரினங்கள்அழிவடைந்து வருகின்றன. இவ்வாறு 100 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விடவும் உலகில் உயிர் பல்கைகைத்தன்மை அழிவடையும் வேகம் பத்தாயிரம் மடங்காக அதிகரித்துள்ளது.

சுற்றாடல்பாதிப்பு மற்றும் உயிர் பல்வகைத்தன்மை அழிவடைவதன்விளைவாக வறுமை, பட்டினி, சுகாதாரம், நகர காலநிலை என்பவற்றோடுகடல் மற்றும் நிலம்சார்ந்த 44 நிலையான அபிவிருத்தி இலக்குகளில் 35 இலக்குகள் அடையும் முயற்சிகள் தற்போதும் தடைப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றத்தை பொறுத்தவரையில், 2030 - 2052 ஆம் ஆண்டுக்கும் இடையில், புவிவெப்பமடைதல்1.5ூஇற்கும் மேலாக அதிகரிக்கக் கூடும் என காலநிலை மாற்றம்தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழு மதிப்பீடு செய்துள்ளது.

விஞ்ஞானிகளின் சங்கத்தில் அங்கம் வகிக்கும் சஞ்சலி டி சில்வா என்னும் இளம் விஞ்ஞானி இலங்கை நாளாந்தம் காலநிலை மாற்றங்களை எதிர்கொண்டு வருவதாக தனது இணைய பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காலநிலைபாதிப்புக்களை தடுக்க விரும்பாத சில நாடுகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளே இதற்கு காரணம் என்பதோடு, எனது குடும்பமாக கருதும் எனது நாட்டு மக்களுக்கு அந்த பாதிப்புக்கள் நேரக்கூடாது என்றே விரும்புகிறேன்.

ஜேர்மனி கண்காணிப்பு அமைப்பினால் வருடாந்தம் வெளியிடப்படும் காலநிலை அனர்த்தம் தொடர்பிலான சுட்டியில், ஜேர்மனியையும் , இலங்கைளையும் கடுமையான காலநிலை அனர்த்தங்களை எதிர் கொள்ளும் நாடுகள் வரிசையில் பட்டியலிட்டுள்ளது.

கோப்-27 காலநிலை மாற்ற மாநாட்டில் வெளியிடப்பட்ட இலங்கையின் காலநிலை மீள்திறன் திட்டம் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உட்படஇயற்கைசூழல்சார்ந்த தீர்வுகளைதுரிதப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான இலங்கையின் நிகழ்ச்சிநிரல் வரைபடம் ஊழுஊ 28 மாநாட்டில் வெளியிடப்படும்

முரஙஅஷ்பெ-ஆழவெச நயடஎன்னும்உலகளாவிய பல்வகைத்தன்மை கட்டமைப்பின் இலக்குகளை அடைவதற்காக 2016 முதல் 2022 வரையிலான இலங்கையின் தேசிய உயிர் பல்வகைமைக்கான மூலோபாய செயல் திட்டத்தினை புதுப்பிக்கும் செயற்பாடுகளையும் ஆரம்பித்துள்ளோம்.

36 உலகளாவிய உயிர் பல்வகைமை வெப்ப வலயங்களில் இலங்கையும் ஒன்றாக இருப்பதால், பழமையான சுற்றுச்சூழல் கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்காக உயிரினங்கள் குறித்த தேசியக் கொள்கையை வகுக்க சுற்றாடல் அமைச்சிற்குநான்பணிப்புரை வழங்கியுள்ளேன்.

பொதுவான மற்றும் அபாயகரமான கழிவுகளின் ஒன்பது வகைகளை உள்ளடக்கிய வகையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை இலங்கை உருவாக்கியுள்ளது. நாட்டில் இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தவதற்காக இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவ தேசியக் கொள்கைஉருவாக்கப்பட்டது.

2019 இல் நிலைபேறான நுகர்வுமற்றும்உற்பத்திக்கான தேசிய கொள்கையை இலங்கை வகுத்தது. பசுமை கொள்முதல் கொள்கை மற்றும் பசுமை பெயரிடல் கட்டமைப்பு இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

காலநிலை மாற்றம், உயிர் பல்வகைமை இழப்பு மற்றும் சூழல் மாசடைதல் ஆகிய மூன்று சிக்கல்களைத் தீர்க்க புதிய அறிவு மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்த புதிய காலநிலை மாற்றச்சட்டம் மற்றும் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தை உருவாக்க எனது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் பசுமைப் பொருளாதாரத்திற்கான மாற்றத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். ஆனால்அதற்கானசெலவுகள் உள்ளன. 2023 முதல் 2042 வரை காலநிலை சுபீட்சத் திட்டத்தை செயல்படுத்த 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும்.

2050ஆண்டாகும்போது நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான இலங்கையின் வழிகாட்டல்களை செயல்படுத்த 100 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகை தேவைப்படுகின்றது. பட்டியல் இத்துடன் முடிவடையவில்லை. இதற்குத் தேவையான வளங்களுக்கான மூலங்களைநாம்எங்கிருந்து பெற்றுக்கொள்வது என்ற கேள்வி உள்ளது.

இந்த பணத்தை உள்நாட்டில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது. இது இலங்கை மட்டும் எதிர்கொள்ளும் பிரச்சினை அல்ல. வளரும் நாடுகளுக்கு 2030ஆம் ஆண்டுக்குள் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை பூர்த்தி செய்ய 5.9 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள்தேவைப்படுகிறது.

2050ஆம்ஆண்டளவில் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைய பசுமை வலுசக்தி தொழில்நுட்பங்களுக்கு மேலும் 04 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது. ஊழுஊ 27 இல், காலநிலை பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு சேதம் மற்றும் இழப்புகளுக்கு நிதியளிப்பதற்காக இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது.

சார்ம் எல் ஷேக் அமுலாக்கத் திட்டம் மூலம், மாற்றம்குறித்தகுழுவொன்று நிறுவப்பட்டது. அந்தக் குழுக் கூட்டங்களிலும், அண்மைக்கால ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தொடர்களிலும் கலந்துரையாடப்பட்ட முக்கிய பிரச்சினைகளுக்குஇதுவரை தீர்வு காணப்படவில்லை.

பெரும் அதிகாரப் போட்டி, புவிசார் அரசியல் நலன்கள் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களின் சொந்தஉள்நாட்டுக்கொள்கை ஆதிக்கம்செலுத்தும்சூழலில், காலநிலை மாற்றம் போன்ற மனித உயிர்வாழ்வு குறித்து நிலவுகின்ற சவால்கள் தொடர்பில் ஒத்துழைப்புடன் செயற்பட உலகளாவியதலைவர்களால் முடியவில்லை என்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

உதாரணமாக, காலநிலை மாற்றத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் அடுத்த ஆண்டுக்குள் அமெரிக்கா தலைமைத்துவத்தை எதிர்பார்க்க முடியாது. அடுத்த ஆண்டு அமெரிக்காவிற்கு தேர்தல் ஆண்டாக இருப்பதோடு, முதலாவதாக காலநிலை மாற்றத்தை மறுப்பவர்களுக்கும், இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தீவிரமாக இருப்பவர்களுக்கும் இடையே உள்நாட்டு ரீதியில் நிலவும் கருத்து வேறுபாடுகளை வெற்றிகொள்ள வேண்டும்.

உக்ரைன் போரினால் ஐரோப்பா பிணைக்கப்பட்டுள்ளது. இந்து-பசுபிக் பிராந்தியத்தில் நில வும் பதற்றம் மேலும் அதிகரிக்கலாம்.

பிரிட்ஜ்டவுன்முன்முயற்சி, மக்கள் மற்றும் பூமிக்கான பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் ஐ.நா பொதுச்செயலாளரின் பல முயற்சிகள் உட்பட பல்வேறு உலகளாவிய அமைப்புகள் காலநிலை மாற்றத்தின் சிக்கலைத்தீர்க்க முயற்சித்துள்ளன.

இதுவரை எழுந்துள்ள பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் எமக்குத் தெரிகின்றன. ஆனால் பணமும், தலைமைத்துவமும், செயற்பாடும் இன்மையே குறைபாடாக உள்ளது. எனவே, ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாம் மற்றும் உலகளாவிய தெற்கில்உள்ளபிறநாடுகளும் மாற்றுத் தலைமைப் பொறிமுறையைவலுப்படுத்த வேண்டும்.

காலநிலை மாற்றம் மற்றும் உயிர்பல்வகைமை இழப்பு போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடுவதில் புவிசார் அரசியல் மற்றும் அதிகாரப் போட்டிகள் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றத்திற்கு குறைந்தளவில் பொறுப்பான நாடுகள், இழப்புகளின் விகிதாசாரத்தில் கூடிய பங்கைஏற்காமல்இருப்பதை உறுதிசெய்ய, எங்களுக்கு ஒரு காலநிலை நியாய மன்றம் தேவை. இதை நிறைவேற்ற வேண்டும் என்று நாம் கூட்டாகக் குரல் எழுப்ப வேண்டும்.

நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான நிதியம் பற்றிய விவாதம் தொடர்ச்சியாக இருப்பதோடு, அதன்போத நாம்பின்வருவனவற்றையும் குறித்து வலியுறுத்த வேண்டும்.

எம்மிடம் பணம் குறைவாகவே உள்ளது. ஆனாலும் நாம் குறைந்தபட்சம் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான முன்முயற்சிக்கான 100 பில்லியனில் இருந்து இந்தப் பணிகளை ஆரம்பித்து, அதைச் செயல்படுத்தி சாதகமான முடிவுகளைப் பெறுவோம்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# சைவ வழிபாட்டு மரபுகள்

'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்ற ஈழத்து பெரியவரான சுவாமி விவேகானந்தரின் அன்பு சார் தத்துவார்த்த கருத்திற்கமைவாக ஈழத்திலே சைவ வழிபாட்டு மரபுகள் இந்துக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இவ் வழிபாட்டு மரபுகள் இக்கால மக்களின் மனநிலையைச் சமநிலைப்படுத்தி பக்தி நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன. மக்கள் தமது பக்தி நிலையை வெளிப்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாகவே வழிபாட்டு மரபுகள் காணப்படுகின்றன. தூய ஆத்மா தனது வீடுபேற்றை அடைய மூல காரணமாக அமைவது வழிபாட்டு மரபுகள் ஆகும்.

இவ் வழிபாட்டு மரபுகளை ஈழத்து மக்கள் இரண்டு வகையாக நோக்கிக் கடைப்பிடித்து வருகின்றமை மறுக்க முடியாத கருத்தாகும். இவை ஆகமம் சார் வழிபாடுகள், ஆகமம் சாரா வழிபாடுகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆதி கால மக்கள் ஐம்பூதங்களையே தமது நம்பிக்கையாகக் கொண்டு வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர். ஆனால் அம்முறை காலப்போக்கிலே திரிபடைந்து இவ் நவீன யுகத்திலே திருவுருவ வழிபாடாகப் பரிணாமித்து நிற்கின்றது.

இவ்வாறு ஆகமம் சாராத வழிபாட்டு முறைகள் பற்றி நோக்குகையிலே ஆகமம் சாராத வழிபாடு என்பது ஒரு ஆத்மா தனது பக்தியினை தனது நம்பிக்கையினூடாக வெளிப்படுத்துவதே ஆகிறது. குளக்கரைகளின் ஓரங்களிலும் மரத்தடியினுளும் வீதியோரங்களிலும் ஆற்றோரங்களிலும் ஒரு கல் ஒன்றை நட்டு அதற்கு பூ வைத்து தீபம் காட்டி நைவேத்தியங்கள் என்பவற்றை படைத்து வழிபடுவதாகும். அத்தோடு தாவரங்கள், விலங்குகள் என்பனவற்றையும் தெய்வங்களாகக் கருதி அவற்றிற்கு பணி செய்து வழிபட்டு மன அமைதி அடைவதுமாகக் காணப்படுகின்றது.

உதாரணமாக மாட்டினை தெய்வமாகக் கருதி 'கோமாதா' என்ற பெயரினைச் சூட்டி தைப்பொங்கலிற்கு அடுத்த நாளிலே பட்டிப் பொங்கல் விழா எடுத்து நன்றி செலுத்தி வழிபடுகின்றோம். அத்தோடு உழவர்களுக்கு நன்மையைச் செய்யும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதற்காக தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாறாக ஆகமம் சாரா வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஈழத்திலே ஆகமம் சாரா தெய்வங்களாக கண்ணகை அம்மன், திரௌபதி, வைரபர், நாகதம்பிரான் போன்றவர்கள் காணப்படுகின்றனர். இலங்கையிலுள்ள மக்கள் கண்ணகியை இன்றுவரை 'பத்தனி தெய்வம்' என வழிபடுகின்றனர்.

இது சிலப்பதிகாரத்தில் கூறப்படும் நீதிக் கருத்தான 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்' என்பது இறை நம்பிக்கை மூலம் வெளிப்பட்டு நிற்பதனைக் காண முடிகிறது.

மேலும் ஆகமம் சார் வழிபாட்டினை நோக்கும் போது ஆகமம் சார் வழிபாடு என்பது தனது பக்தியினை நெறிமு-றை நியதிகளோடு வழிபடுவதாகும். இவ்வாறு ஈழத்து மக்களிடையே ஆகமம் சார் தெய்வங்களாக திருமால், சிவன் விரவிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை பக்தியை வெளிப்படுத்துவதற்கு ஆகம முறைப் படியிலான கோயில் அமைத்து திருவுருவங்களைப் பிரதிட்டை செய்து பிராமணங்களைக் கற்றறிந்த பிராமணர்களைக் கொண்டு நாமங்கள், மந்திரங்களை ஓதி வழிபடுவதாகும். இம்முறையினையே ஆலயங்கள் அமைக்கப்படுதல் முக்கியமாகிறது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற கருத்திற்கு அமைவாக ஆலய அமைப்பு இந்துக்களின் வழிபாட்டு மரபினை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றது.

அத்தோடு கும்பாவிசேகம், கிரியைகள், வேள்விகள், யாகங்கள், விரதங்கள், பண்டிகைகள், ஆடை அணிகலன், உணவுப் பழக்க வழக்கங்கள் என்பன சைவ வழிபாட்டு மரபுகளையே காட்டி நிற்கின்றது. அரசர்கள் வரங்களை வேண்டி யாகங்கள் ஓதுவதும் மந்திரங்களை ஓதுவதும் வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகின்றது. தற்காலத்து வழிபாட்டு முறைகள் சாதிப் பாகுபாட்டினைத் தகுத்து இறைவ-னிடத்தில் அனைவரும் ஒன்றே என்ற கருத்தினை ஆணித்தரமாகக் கூறி நிற்கின்றது. 'ஒன்றே குலம் ஒன்றே கோத்திரம்' என்ற கருத்திற்கு அமைவாக சைவ வழிபாட்டு மரபு விரவி இருப்பதனைக் காண முடிகின்றது. சைவ வழிபாட்டு மரபினிலே 'யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி' என்ற பகிர்ந்துண்ணல் போன்ற நல்ல பண்பும் வெளிப்படுகின்றது.


இவ்வாறாக சைவ வழிபாட்டு மரபுகள் மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து செம்மைப்படுத்தி இருப்பதனைக் காண முடிகின்றது.

'அன்பே சிவம்'










மேலும் ஆகமம் சார் வழிபாட்டினை நோக்கும் போது ஆகமம் சார் வழிபாடு என்பது தனது பக்தியினை நெறிமுறை நியதிகளோடு வழிபடுவதாகும். இவ்வாறு ஈழத்து மக்களிடையே ஆகமம் சார் தெய்வங்களாக திருமால், சிவன் விரவிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை பக்தியை வெளிப்படுத்துவதற்கு ஆகம முறைப் படியிலான கோயில் அமைத்து திருவுருவங்களைப் பிரதிட்டை செய்து பிராமணங்களைக் கற்றறிந்த பிராமணர்களைக் கொண்டு நாமங்கள், மந்திரங்களை ஓதி வழிபடுவதாகும். இம்மு-றையினையே ஆலயங்கள் அமைக்கப்படுதல் முக்கியமாகிறது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற கருத்திற்கு அமைவாக ஆலய அமைப்பு இந்துக்களின் வழிபாட்டு மரபினை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றது.



ப.ஆரணி
யா/ வைத்தீஸ்வரா கல்லூரி


Tourism Northern Province
synamon global
தமிழ் 99.5 99.7
காலைக்கதிர்
BirdFather More Social More Business
IDEA FACTORY THE SOCIAL INNOVATIONS LAB
இலங்கையில் முதல் முறையாக
நெகிழி நடுநிலை நிகழ்வு
அல்லங்காடி கொண்டாட்டம்
happymarket.lk அல்லங்காடி கொண்டாட்டம்
சனிக்கிழமை 4:00-10.00 பி.ப
கோட்டை பகுதியில்
We STOP single-use PLASTICS
(உறிஞ்சுகுழாய்கள், கத்திகள், கிளறிகள், முட்கரண்டிகள் மற்றும் கரண்டிகள், கோப்பைகள், இடியப்ப தட்டுகள், தட்டுகள், மாலைகள்)
happymarket.lk
தொடர்புகளுக்கு 077 8960281

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் தினமும் 50 பேர் மதுசாரம் அருந்துவதால் சாவு

## ஆய்வில் தகவல்

இலங்கையில் தினமும் 50 பேர் மதுசாரம் அருந்துவதால் இறக்கின்றனர் என மதுசாரம்மற்றும்போதைப்பொருள்தகவல் நிலையம் தெரிவிக்கிறது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி சர்வதேச மதுசார தடுப்பு தினம் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டு இந்தத் தகவலை குறித்த நிலையம் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் மேலும் குறிப்பிடும் விடயங்களாவன -

உலகளாவிய ரீதியில் ஒவ்வோர் ஆண்டும் 3 மில்லியன் இறப்புகள் இடம்பெறுவதுடன், பல நோய்கள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதற்கு மதுசாரம் அருந்துதல் முதன்மைக் காரணமாக அமைகின்றது.

மேலும், கல்லீரல் ஈரல் அழற்சி, புற்றுநோய் மற்றும் வீதி விபத்துகள் உட்பட தொற்றாத நோய்களால் ஆண்டுதோறும் ஏராளமானவர்கள் பாதிப்படைகின்றனர்.

இலங்கையில் தினமும் 50 பேர் மதுசாரம் அருந்துவதால் இறக்கின்றனர்.

மதுசார வரி மூலம் கிடைக்கும் வருவாயைக் கணக்கிடுவதால் மாத்திரம் அரசின் வருமானத்தைக் கணிக்க முடியாது. மதுசாரம் அருந்துவதால் அவர்களின் உடல் நலம், பொருளாதாரம் மற்றும் இதர செலவுகளுக்கு அரசு மேற்கொள்ளும் நிதிச் செலவுக்கும் மதுசார வரியின் அளவுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் கணக்கிட்டு, மதுசார வரித் தொகை அரசுக்கு வருமானமாக அமைகின்றதா, இல்லையா என்பதை அறிவியல்பூர்வமாகக்கணக்கிடவேண்டும்.

2022 ஆம் ஆண்டில் மதுசார வரி வருமானம் 165.2 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் (இலங்கையில் மதுசாரக் கட்டுப்பாட்டுக்கான முதலீட்டு சபை) 2023இல் நடத்திய ஆய்வின்படி, இலங்கையில் மதுசார பாவனையால் ஏற்பட்ட சுகாதார மற்றும் பொருளாதார பாதிப்புகள் 237 பில்லியன் ரூபாவாகும்.

மதுசாரத்தின் பயன்பாடு ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்துகிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

நம் நாட்டில் மதுசாரத்தின் பயன்பாட்டைக்குறைப்பது, நாட்டுமக்களின் ஆரோக்கியத்துக்கும், பொருளாதாரத்தை சிறந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கும் வலுவான பங்களிப்பை அளிக்கிறது. ஆனால், நாட்டில் மதுசாரம் தொடர்பான தற்போதைய நிலைமை மதுசார பாவனையை ஊக்குவிப்பதில் வலுவாகப் பங்களிக்கிறது.

சுற்றுலாவை மேம்படுத்துவதாக கூறி ஒவ்வொரு நகரத்திலும் மதுசார சாலைகளை ஆரம்பித்தல்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் வசீகரமான இயற்கை அழகை ரசிப்பதற்காகவே வருகின்றனர். மாறாக, மதுசாரம் அருந்துவதற்காக வருபவர்கள் அல்லர் என்பது மிகத் தெளிவாக தெரிகிறது.

சுற்றுலாப் பயணிகளுடன் நடத்தப்பட்ட ஆய்வில், சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் பெயர்ப்பலகை போடுதல், பாதுகாப்பு, சுத்தமான கழிப்பறை வசதிகள் போன்றன இருக்க வேண்டும் என்பதே முக்கியமான கோரிக்கைகளாக குறிப்பிட்டுள்ளனர். ஆனால், நாட்டின் ஒவ்வொரு புறநகர் மற்றும் கிராமங்களிலும் மதுசார சாலைகளைத் திறப்பது, மதுசார நிறுவனங்களின் தூண்டுதலின் பேரில் சுற்றுலாவை மேம்படுத்துகிறோம் என்ற போர்வையில் இடம்பெறும் மதுசார வியாபாரத்துக்கான விளம்பரமாகும்.

சதொச விற்பனை நிலையங்களில் மதுசார சாலைகளை ஆரம்பித்தல்.

சதொச விற்பனை நிலையங்களில் மதுசார விற்பனைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதன் மூலம் இலகுவாக மதுசாரம் கிடைப்பது அல்லது கிடைப்பனவு அதிகரிப்பதுடன் மதுசார பாவனை அதிகரிக்கிறது. இதுபோன்ற பல்பொருள் அங்காடிகளுக்கு குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிகமாக வருகை தருவதால் மதுசாரத்தை அழகாக பொதி செய்து வைத்திருப்பதை பார்ப்பதன் மூலம் மதுசாரத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு, மதுசாரத்தை அருந்தத் தூண்டுகிறது.

இது, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைப் பயன்படுத்தி, தங்கள் சொந்தப் பிரசாரத்தை மேற்கொண்டு, விற்பனையை அதிகரிக்க மதுசார நிறுவனங்களின் நயவஞ்சகத் திட்டமாகும்.

மதுசாரங்களின் விலை உயர்வால் சட்ட விரோத மதுசார விற்பனை அதிகரித்துள்ளதாக போலியான கூற்றுக்களை வெளியிடுதல்.

தற்போது மதுசாரத்தின் விலை அதிகமாக உள்ளதால், சட்ட விரோத மதுசார விற்பனை அதிகரித்து, அதனால் அரசின் வரி வருவாய் குறைந்துள்ளதால், விலையை குறைக்க வேண்டும் என்ற கருத்து மதுசார நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இது தவிர, சட்டபூர்வ மதுசாரத்தின் விலையை குறைப்பது சட்ட விரோத மதுசாரம் அருந்துவதை கட்டுப்படுத்துவதற்கு ஒரு பயனுள்ள உத்தியாகக் கருத முடியாது.

1995 ஆம் ஆண்டில், சட்ட விரோத மதுசாரம் பயன்பாட்டை குறைப்பதற்காக பியர் மீதான வரிகள் கடுமையாக குறைக்கப்பட்டன. இதன் விளைவாக பியர் நுகர்வு அதிகரித்தது.

மதுசாரம் பயன்படுத்துவோரின் சமூக நிலைகள், பயன்பாட்டின் எதிர்பார்ப்புகள், சட்டபூர்வ மதுசாரத்தின் விலை உயர்வு போன்ற காரணங்களால், சட்ட விரோத மதுசாரத்துக்கு மாறுவது நடைமுறையில் நடப்பதில்லை.

வரவு - செலவு திட்டத்தில் 2024 பணவீக்கத்துக்கு விகிதாசாரமாக மதுசார வரிகளுக்கான விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தல்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, மதுசார வரிவிதிப்பு மற்றும் விலை நிர்ணயக் கொள்கைகள் மிகவும் செலவு குறைந்த மதுசார கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாக அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. மதுசாரத்தின் மீதான வரிகளை அதிகரிப்பது புதிய பாவனையாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதாக அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தற்போதைய பாவனையாளர்களின் பயன்பாட்டைக் குறைக்கிறது.

மதுசாரம் அருந்துவதால் நாட்டுக்கு ஏற்படும் சுகாதாரச் செலவுகளை ஈடுகட்டத் தேவையான அரசாங்க வருவாயையும் இது வழங்குகிறது.

சர்வதேச நாணய நிதியம் 2023இல் நம் நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, ஜனவரி 1, 2024 இற்குள் அரசின் வரி வருவாயை அதிகரிக்கவும், மதுசாரத்தின் பயன்பாட்டைக் குறைக்கவும் பணவீக்கத்துக்கு விகிதாசார மதுசார வரிகளுக்கான விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் அரசின் சுகாதாரச் செலவை குறைக்கலாம்.

எனவே, எதிர்வரும் 2024 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம் பணவீக்கத்துக்கு விகிதாசாரமாக மதுசார வரிகளுக்கான விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு, வரியைவசூலிப்பதன் மூலம் நாட்டில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியை முகாமை செய்வதற்காக, மதுசாரத்துக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் தர்க்க ரீதியான வரிக் கொள்கை மிகவும் முக்கியமானது.

நாட்டுக்கு வரி வருவாய் இழப்பு மற்றும் மதுசாரத்தால் ஏற்படும் பாதிப்புகளால் ஏற்படும்செலவுகளைக்கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், இலகுவாக மதுசாரம் கிடைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் என்ற வகையில் வலியுறுத்துகின்றோம் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவிக்கிறது. (05)

# போதைப்பொருள்களால் இறப்புக்கள் அதிகரிப்பு

## வைத்தியர்கள் எச்சரிக்கை

நாட்டில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை அண்மித்துள்ளதாகவும் எதிர்காலத்தில் ஹெரோயினை அளவுக்கதிகமாக பயன்படுத்தி ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் கண்டி வைத்தியசாலையின் விசேட மனநல வைத்தியர் கிஹான் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை அண்மித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இந்த தரவுகளில் வெளிப்படுத்தப்படாத அதிகளவானோர் சமூகத்தில் காணப்படலாம் எனக் கருதுகின்றோம்.

புள்ளிவிவரங்களை நோக்கும் போது சுமார் 6 ஆயிரம் பேர் தடுப்பூசி மூலம் ஹெரோயின் போதைப்பொருளைபயன்படுத்துகின்றனர்என்பதோடு இவர்களில் அதிக எண்ணிக்கையானோர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் எதிர்காலத்தில் ஹெரோயினை அளவுக்கதிகமாக பயன்படுத்தி அதன்மூலம் ஏற்படும் மரணங்களின்எண்ணிக்கைமேலும்அதிகரிக்கலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளது. காரணம் தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் ஹெரோயின் போதைப்பொருள்பாவனையாளர்களின்எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக மாத்தளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது 16 முதல் 18 வயதுக்கிடைப்பட்ட சுமார் 28 வீதமான சிறுவர்கள், மற்றும் இளைஞர்கள் ஹெரோயின் போதைப்பொருள் உட்பட ஏதேனும் ஒருவகை போதைப்பொருளை பயன்படுத்துகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இந்த நிலைமை நாட்டில் பாரிய பேரழிவை ஏற்படுத்தக் கூடியது.

மேலும் பாடசாலையிலும் போதைப்பொருள் பாவனைஅதிகரித்துள்ளது. குறிப்பாகபோதைப்பொருள் மாத்திரைகள், தடுப்பூசிகள் சமூகத்தில் பாரியளவில் விற்பனை செய்யப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 408 கிலோ 309 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இதன்போது 44 ஆயிரத்து 241 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த காலப்பகுதியில் 12 கிலோ 995 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளும், 100 கிலோ 932 கிராம் ஹசீஸ் ரக போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# நாட்டில் டெங்கு நோயாளரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்

முன்னைய மாதங்களுடன் ஒப்பிடும்போது கடந்த மாதத்தில் டெங்குநோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்தபோதிலும் மழை காரணமாக எதிர்காலத்தில் டெங்குநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற எச்சரிக்கை வெளியாகியுள்ளது. தொற்றுநோயியல் பிரிவின் சமீபத்திய தரவுகளில், 2,605 டெங்கு நோயாளர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2023 ஆம் ஆண்டின் தொடக்க காலத்தில் இருந்து ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வரை மொத்தமாக 64,816 டெங்கு நோயாளர்களும் 38 இறப்புகளும் பதிவாகியுள்ளன. மேலும், டெங்கு பரவும் இடங்கள் அதிகமாக உள்ள பகுதிகளின் எண்ணிக்கை ஏழாக மட்டுமே குறைந்துள்ளது. நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை அகற்றி சூழலை சுத்தம் செய்யவும் எடுக்கப்பட்ட முயற்சிகள் மிகவும் பயனுள்ளனவாக அமைந்துள்ளது. ஆனால், தற்போது தொடரும் மழை காலங்களுக்கு மத்தியில் டெங்கு நோய் மேலும் அச்சுறுத்தலாகவே உள்ளது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூர் அதிகாரிகளும் சுகாதார நிறுவனங்களும் தொடர்ந்து அயராது உழைத்து வருவதாக கொழும்பு பிரதான சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி கூறினார். தொடரும் மழை காலங்களுக்கு மத்தியில் டெங்கு நோய் மேலும் அச்சுறுத்தலாகவே உள்ளது. பொது விழிப்புணர்வு பிரசாரங்கள், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ உதவி ஆகியவை டெங்கு நோய்க்கு எதிரான முக்கிய உத்திகளாக உள்ளன என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். (05)

# காணி அபகரிப்புக்கு எவருக்கும் நாம் இடமளிக்கப்போவதில்லை

## அமைச்சர் ஹரின் சபையில் உறுதி

திருகோணமலை குச்சவெளி, புல்மோட்டை பிரதேசங்களில் பொது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டிருப்பது உறுதிப்பட்டிருந்தால், அந்த மக்களுக்காக அதனை பாதுகாத்து வழங்க நடவடிக்கை எடுப்போம்.

காணிகளை பலாத்காரமாக பிடித்துக் கொள்ள யாருக்கும் இடமளிப்பதில்லை என காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்ரான் மஹ்ரூப் தெரிவிக்கையில் -

குச்சவெளி, புல்மோட்டைபிரதேசங்களில் மதகுரு ஒருவர் அண்மைக்காலமாக மக்களுக்கு சொந்தமான காணிகளை அத்துமீறி பிடிக்கின்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுத்துச்செல்கின்ற சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது மாத்திரமல்ல, நாட்டில் இன ரீதியான பிரச்சினைக்கும் காரணமாக அமைகிறது. அதனால் இந்த மதகுருவின் செயற்பாடுகள் தொடர்பில் காணி அமைச்சர் என்றவகையில் அறிந்திருக்கிறீர்களா அல்லது இவரின் இந்த செயற்பாடுகளுக்கு அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்போகிறது?

குறிப்பாக இந்த மதகுரு வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம் ஆண்கள் ஜும்ஆ தொழுகைக்குச்சென்றிருக்கும்வேளையில் பெண்கள் மாத்திரம் வீடுகளில் இருக்கும் நிலையிலேயே அத்துமீறி இவ்வாறு காணிகளைப் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். காணி தொடர்பில் பிரச்சினை இருக்குமானால் அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்கலந்துரையாடிநடவடிக்கை எடுக்காமல் இவ்வாறு காணி சுவீகரிப்பு நடவடிக்கைஇடம்பெறுகிறது. இதுதொடர்பில் எடுக்கும் நடவடிக்கை என்ன? - என்றார்.

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

குச்சவெளி மற்றும் புல்மோட்டை பிரதேசங்களில் காணி அபகரிப்பு தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லை. உத்தியோகபூர்வமற்ற முறையில்கிடைக்கப்பெற்றஅறிக்கைகளின் பிரகாரமே எமக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது. இருந்தபோதும் அரசாங்கம் என்றவகையில் காணிகளை பலாத்காரமாக பிடித்துக்கொள்ள யாருக்கும் இடமளிப்பதில்லை என்பதே எனது நிலைப்பாடு.

என்றாலும், குச்சவெளி மற்றும் புல்மோட்டை பிரதேசங்களில் காணி அபகரிப்பு இடம்பெறுவது தொடர்பில் உங்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேடிப்பார்த்து, அதன் உண்மைத்தன்மை தொடர்பாக அமைச்சின் செயலாளர் ஊடாக அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்டு அறியத்தருகிறேன்.

அத்துடன் அந்த பிரதேசங்களில் பொது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டிருப்பது உறுதிப்பட்டிருந்தால், அந்த மக்களுக்காக அதனைப் பாதுகாத்து வழங்க நடவடிக்கை எடுப்போம் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன். அத்துடன் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக அந்த பிரதேசங்களில் நாங்கள் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்களுக்கு மாற்று காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். - என்றார். (05)

# லொறிகள், பஸ்கள், தொழிற்துறைசார் வாகனங்களின் இறக்குமதித் தடைகள் தொடர்பாக விசேட அவதானம்

## நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

நேர்மறையான பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதே அரசாங்கத்தின் இலக்காகும். அதன் அடிப்படையில் லொறிகள், பஸ்கள் மற்றும் தொழிற்துறைசார் வாகனங்களின் இறக்குமதித்தடைகள்தொடர்பில்அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.



ஜனாதிபதிஊடகமையத்தில்இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பொருளாதாரத்தை ஸ்திரமடையச் செய்யும் இலக்குடன் நாம் செயற்பட்டு வருகின்ற நிலையில், சில பொருள்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ளமையால் அதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

இதனால் சர்வதேசத்துடனான வர்த்தக நடவடிக்கைகளிலும்பாதிப்புக்கள்ஏற்பட்டன. இது தேசிய உற்பத்தியாளர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஏற்றுமதி உற்பத்திக்கான மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாவிட்டால், ஏற்றுமதி வருமானமும் பாதிக்கப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டு வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துபொருள்களுக்குமான இறக்குமதித்தடைகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய வாகன இறக்குமதி விவகாரத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் கடந்த இரு அமைச்சரவை கூட்டத்திலும் அவதானம் செலுத்தப்பட்டது.

அதாவது எந்தவகையான வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

லொறி, பஸ், தொழிற்துறைக்குத் தேவையான வாகனங்கள் உள்ளிட்டவற்றின் இறக்குமதி தொடர்பான கொள்கையை மாற்றுவது தெடர்பாக அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக 2024 இல் 1.8 - 1.9 நேர்மறை பொருளாதார வளர்ச்சியைஎதிர்பார்க்கின்றோம். கொள்கை ரீதியிலான பொருளாதார வளர்ச்சியின் ஊடாக தற்போது தாங்கிக் கொள்ள முடியாத நிலைமையிலுள்ள வாழ்வாதாரச் சுமையைக் குறைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் இலக்காகும். - என்றார். (05)

# இலங்கையில் யாசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

நாட்டின் 65 நகரங்களில் மாத்திரம் சுமார் 3,000 முதல் 4,000 பிச்சைக்காரர்கள் இருப்பதாக தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன் கணக்கிடப்பட்டவர்களின் தரவுகள் விரைவில் சேகரிக்கப்பட்டு அவர்களில் பதினெட்டு வயதுக்குட்பட்டவர்களின் பற்றிய தகவல்கள் திரட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24 மாநகர சபை பிரிவுகள் மற்றும் 41 நகர சபை பிரிவுகளில் நான்கு நாள்களாக நடத்தப்பட்ட கணக்கெடுப்பிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் இக்கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)

# வெளிநாட்டிலிருந்து வைத்தியர்களா? செய்தி பொய் என்கிறார் அமைச்சர்

வைத்தியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக வெளிநாட்டிலிருந்து வைத்தியர்களைவரவழைத்து இலங்கையின் அரசவைத்தியசாலைகளில் பணியில் இணைக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

இந்நிலையில் குறித்த செய்தி உண்மைக்குப் புறம்பானது எனவும், அவ்வாறான எவ்விட நடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லையென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (05)

## காலநிலை...

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திஅடைந்த பொருளாதாரங்கள் குறைந்தபட்சம் 2040 ஆண்டுக்குள் தங்களது நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்குகளை அடைவதற்கு அர்ப்பணிக்க வேண்டும். இந்த இலக்குகளுக்கு இணங்கத் தவறினால், அத்தகைய நாடுகள் உலகின் பிற நாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

அதன்போது, அந்த நிதி வளரும் நாடுகளின் காலநிலை மாற்றத் தணிப்பு, அதற்கான தழுவல் மற்றும் காலநிலை சுபீட்சத்தை அடைந்துகொள்ளல்தொடர்பான நிதித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படலாம்.

காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு உலகளாவிய அபிலாசைகள் போதுமானதாக இல்லை என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது. வளரும் நாடுகளில் ஏற்படும் காலநிலை மாற்றப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தத்தேவையான உத்தரவாதங்களைவழங்கவும் மற்றும் தனியார் நிதி வழங்குதலை ஊக்குவிக்கவும்புதிய அபிவிருத்தி வங்கியின் எஞ்சிய நிதியை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரிட்ஜ்டவுன்முன்முயற்சி தெளிவாகக்கூறியுள்ளது.

புதிய அபிவிருத்தி வங்கியின் மூலம்வழங்கப்படும் கூடுதல் சலுகை நிதியும் இதற்கு முக்கியமான தேவையாகும். காலநிலை மாற்றம் தொடர்பான முதலீடுகள் நீண்டகால பயன்களை வழங்குகின்றன, அதற்காக குறுகிய கால அதிக செலவுகளுடன் கூடிய கட்டமாக வழங்கப்படும் தனியார் நிதியங்களினால் நிதியளிக்க முடியாது.

நிதிநெருக்கடியினால் புதிய அபிவிருத்திக்கான வங்கி (ஹினுடீ), சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் கடன் வட்டிவீதம் அதிகரித் திருப்பதோடு, கடன் பெறும் நாடுகள் மீது மேலும் நிதிச் சுமையை செலுத்தாமல் இருப்பதற்கான மாற்று வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வது காலோசிதமான செயற்பாடாக அமையும்.

இந்த உலக அமைப்புக்களுக்குள்அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அல்லது உலகின் தென் பகுதி நாடுகளின் அழுத்தங்கள் இருந்திருக்குமாயின் பல வருடங்களுக்கு முன்னதாக காலநிலை நிகழ்ச்சி நிரலுக்குள் மேற்படி விடயங்கள் உள்ளீடு செய்யப்பட்டிருக்கும்.

குறைந்தவருமானம் பெறும்நாடுகளுக்குகடன் சலுகைகளை வழங்குவதுதொடர்பில்கென்யா முன்வைத்துள்ள கோரிக்கையைக் கருத்தில் கொள்ள வேண்டும். பாதிப்புக்கள் மற்றும் நட்டஈடு தொடர்பான நிதியத்தின் பணிகளை நிறைவு செய்யும் அதேநேரம் அதற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பங்களிப்பும் அவசியமாகும்.

2050இற்கும் அப்பாலானஇலக்குகளை கொண்டு நகரும் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சுயமான ஈடுபாட்டை நாம் வலியுறுத்த வேண்டும். காலநிலைதொடர்பிலான சர்வதேசநீதிமன்றத்திற்கு ஓரிரு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. காலநிலை பாதிப்புக்களைமனித உரிமைகளாக ஏற்றுக் கொள்ளும்விடயமாகவும் அதனை கருத முடியும். அதுவே உயிர்வாழும் உரிமையின் அர்த்தமாகும்.

காலநிலை அனர்த் தங்களை மட்டுப்படுத்துவதுதொடர்பிலானபொறுப்புக்களை கொண்டுள்ள நாடுகள் தமது பொறுப்பு துறந்துச் செயற்படுமாயின் மக்களின் உயிரைப் பறிக்கும் செயலாக அமையும் என்றார்.

# 12 வயது மாணவன் பாம்பு தீண்டி மட்டு. சந்திவெளி பகுதியில் சாவு!

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் பாம்பு தீண்டியதால் 12 வயது பாடசாலை மாணவன் பரிதாபமான முறையில் உயிரிழந்துள்ளார்.

வந்தாறுமூலை விஷ்னு வித்தியாலயத்தில் எட்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவனான கந்தசாமி டிலக்ஷன் என்ற மாணவனே பாம்பு தீண்டி உயிரிழந்தவராவார்.

பாடசாலை விடுமுறை நாள்களில் தனது பெரியப்பாவின் சந்தனமடு ஆறு பிரதேசத்தில் உள்ள தோட்டத்துக்கு சென்றுதங்கிநின்றுவீடுதிரும்பும்இவர், சென்ற சனியன்று பெரியப்பாவுடன் சந்தனமடுஆறுதோட்டத்துக்குசென்று, ஞாயிறன்று கடுமையான மழை பெய்ததால் வீடு திரும்ப முடியாமல் அங்கேயே இருந்துள்ளார்.

திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் தோட்டவாடியில் உறங்கிக் கொண்டிருந்த இவருக்கு திடீரென வயிற்று நோவுடன் வாந்தியும் ஏற்பட மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்கு பெரியப்பாவின் மோட்டார் சைக்கிளில்சென்று சேர்க்கப்பட்டபோது ,மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை 03.40 மணிக்கு மரணித்துள்ளார்.

தனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லையென திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்..நஸீரிடம் தெரிவித்ததால் மரணத்திற்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மரண விசாரணையில் மாணவனின் வலது காலின் மேல் பாகத்தில் பாம்புதீண்டியதால் குருதியோட்டத்தில் நஞ்சு கலந்து இதயம் செயலிழந்து மரணித்திருப்பது கண்டறியப்பட்டது.

பின்னர் சடலம் மாணவனின் பெற்றோரிடம் நல்லடக்கத்திற்காக ஒப்படைக்கப்பட்டது. (05)

# 2 சிறுமிகளை காணோம்

நன்னடத்தை திணைக்களத்தின் மேற்பார்வையில் செயற்படும் பிபில பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுமிகள் காப்பகத்தைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் காணாமல் போயுள்ளனர் என சிறுமிகள் இல்லத்தின் உதவி கண்காணிப்பாளர் பிபில பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சிறுமிகள் தெபல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 11ஆம் தரத்தில் கல்வி பயின்று வருகின்றனர் எனவும் பாடசாலைப் பைகளை வகுப்பறையில் வைத்து விட்டு பாடசாலையை விட்டு வெளியேறியதாகவும் அதிபர் சிறுவர் இல்ல உதவி காப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்தே இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போன 16 வயதுடைய இரு சிறுமிகளைக் கண்டுபிடிப்பதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பிபில பொலிஸார் தெரிவித்தனர். (05)





JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
Jaffna
Auto
Mini Car
Car
Large Car
SEARCH NEAR VEHICLES
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2023இல் வெளியிடப்பெற்றது.